தென்றல்

ஆசிரியர்:
கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, வைகாசி 8(21-5-'60). சனிக்கிழமை | இதழ் 49

தொல்காப்பியம் - ஒரு சிறு விளக்கம்

இனிமைத் தமிழ்மொழி நமது, தமிழ் மொழி. இம் மொழிக்கண் இன்றைக்குச் சற்றேறக்குறையை இரண்டாயிரம் யாண்டுகட்கு முன் மொழிக்கு உயிர்வேலியாகப் பல இலக்கியங்கள் தோன்றின. எள்ளினின்று எடுபடும் எண்ணெய் போல இவ்விலக்கியங்களினின்று பல இலக்கணங்கள் தோன்றின. அவற்றுள் அகத்தியம் என்னும் அருந்தமிழ் இலக்கணம் ஆழியால் ஆட்கொள்ளப்பட்டதாம். எஞ்சிய இலக்கண நூல்களில் தமிழக வரலாற்றினை எடுத்தியம்ப வல்ல இணையில்லா ஓவியமாகக் காட்சியளிக்கும் ஒப்பற்ற தமிழ்ப் பெருநூல் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமே ஆகும்! இந்நூல் செந்தமிழின் பெருமை தோன்ற அமைந்துள்ள ஓர் அரும்பெரும் நூலாகும். தமிழர்தம் வரலாறு, நாகரிகம், மக்கள் ஒழுகலாறு, மொழி, சமயம், அறம், மறம், வீரம், போர்முறை, அரசியல், புலவர்கள், வள்ளல்கள் ஆகிய யாவற்றையும் நன்கு இயம்புகின்றதெனின் யாவரே இதன் பெருமையை எடுத்தியம்ப வல்லார்? வடமொழியின்கண் உள்ள வேதம் போன்று தமிழ் மொழியில் இந்நூல் சிறப்புற்று இலங்குகிறது. மொழியின் அமைதியை வரம்புபடுத்தி, வனப்புறச் செய்கிற இந்நூல் உலக வரலாறு, மக்கள் வாழ்க்கை, தமிழ்ப் பண்பாடு, தெய்வ நம்பிக்கை, உள இயல்பு ஆகிய பல நூல்களின் கருத்துக்கள் அடங்கிய பொருளதிகாரத்தைத் தன் அகத்தே கொண்டதாய் யாவரும் போற்றும் வண்ணம் தக்க சிறப்புடன் இலங்குகிறது. தொல்காப்பிய ஆசிரியர், பகுப்பு முறை, உரையாசிரியர், இது பற்றி எழுந்த ஆய்வுரை நூல்கள் ஆகியவை பற்றிச் சுருக்கமாகக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இவ்வியற்றமிழ்ப் பெருநூலை இயற்றியவர் தமிழ்ப் பெருங்குடியில் சிறந்ததாகிய காப்பியக் குடியில் பிறந்த தொல்காப்பியர் என்பார். இவரது இயற்பெயர் திரணதூமாக்கினி என்றும் சமதக்னி என்ற முனிவரின் புதல்வர் என்றும் கூறி **ஆரியர் ஆக்குவர்** சிலர். ஆனல் தற்கால ஆராய்ச்சிகளால் [illegible] இவர் தமிழரே என்பது நிலைநாட்டப்[illegible]ளது. சிலர் சோழநாட்டின்கண் [illegible]ழிக்கு அ[illegible]கில் உள்ள காப்[illegible] என்[illegible] பிறந்தவர் என்ப[illegible] சித்தா[illegible]தர் ப. இராமநாதம் பிள்ளை அவர்கள் தமிழ்க்குடிகளாகிய குறுக்கையர், ஏயர்கோ, சேக்கிழார் போன்ற குடிகளில் ஒன்றுன காப்பியக்குடியில் பிறந்தவர் என்றும், தொல்காப்பியம் என்ற சொல் இயம் காப்பு என நிலை மாறி வழங்கி இருக்கும் என்றும் கூறுகிருர். திரு. பாவாணர் அவர்கள் "முந்து நூல் கண்டு" எனப் பாயிரத்தில் கூறியுள்ளதால் அகத்தியர்க்குத் தெரியாத சில நூல்களை இவர் அறிந்த வராகையால் தொன்மையான காப்பியங்களை அறிந்தவர் என்று பொருள் கொள்[illegible]ம் எனக் கூறியுள்ளார். இ[illegible] அகத்தியரின் பன்னிரு மாணவ[illegible]வர் எனப் பன்னிரு [illegible]லம் [illegible]. [illegible]கா விழுப்பம் சேர் தொல்காப்பியம் என்னும் இந்நூல், தென்மொழியோடு பண்டுதொட்டு இணையற்று விளங்குவதான வடமொழியிலும் இல்லாத, உலகம் புகழும் ஆங்கில மொழியிலும் காணுத பொருளதிகாரத்தை தன்னிடத்தே பெற்றுள்ளது. இது எழுத்துப்பால், பொருட்பால், சொற்பால் என மூன்று பிரிவினதாகி வழங்கி வந்தது என்பதை இறையனுர் அகப்பொருள் உரையின்கண் "திணையே கைகோள்" (38) என்னும் நூற்பாவில், 'கூற்று' என்பது கூறுதற்கு உரியாரை அறிந்து அவருள் இன்னுர் கூறினுர் இப்பாட்டு என்று அறிவது. அக்கூறுதற்குரியாரை செம்பூட்சேயார் கூற்றியலுள்ளும் தொல்காப்பியனுர் பொருட்பாலுள்ளும் கண்டுகொள்க" எனக் காணப்படுவதால் அறியலாம். இந்நூல் 1600 நூற்பாக்களான் இயன்றது. எழுத்து, சொல், பொருள் என்ற ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களை உடையது. எழுத்தால் சொல்லும், சொல்லால் பொருளும் உணரப்படுவதாதலின் இவ்வாறு அமைத்தனர் ஆசிரியர். எழுத்ததிகாரமானது மொழியின் ஒலியமைப்பு, புணர்ச்சி, ஒலிமாற்றம் ஆகியவற்றை எடுத்தோதுகிறது. சொல்லதிகாரமானது தமிழ்ச் சொல்லின் சிறப்பு, திணை, பால் முதலிய உயிர்ப்பகுப்பு, உயிரில் பகுப்பு, நாகரிகச் சொல் திறமை, காரணத்தோடு அமைந்த சொற்கள், அவைகளின் விதிகள் ஆகியவற்றை தெள்ளிதின் உணர்த்துவது ஆயின் பொருளதிகாரமோ மக்களின் மன இயல்பாகிய அறம், புறம், வீரம், சுவை, உவமை, யாப்பு, அணி, மரபு ஆகியவற்றையும் தெளிய உரைப்பதாகும். இது தமிழரின் அறிவுக் கருவூலம், கலை இலக்கியக் களஞ்சியம், வண்ணப்பூங்கா, வாழ்க்கை வழிகாட்டி மக்கள் விலங்கு என்ற உணர்வை வெளிப்படுத்தும் உறு மருந்து, ஒழுக்கத்தின் உறைவிடம். தமிழரின் நாகரிகம், அன்பு, பண்பாடு, காதல் முதலியவற்றை அளிக்கும் அருஞ்சுனை, பேரியாறு, மாகடல், எனப் பல சிறப்புக்கள் அமைந்த இப்பொருளதிகாரம் வேறு எம்மொழியிலும் இல்லை என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வதில் யாதொரு தவறும் இல்லையன்றோ?

இந்நூல் பல்லாண்டுகட்கு முன் உரையின்றி யாவரும் கற்று உணர வல்லதாய் மிளிர்ந்தது. பின் சில

— 12-ம் பக்கம் —

பொய் வழக்கு!

-நீதி புரிந்துகொண்டது!

காங்கிரசுத் தோழர்களைத் தாக்கியதாக போலீசார் எம். சி. 75-வது செக்சன்படி டி. எம். செயராமன், டி. ஆர். துரை (ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்), தோழர்கள் க. அன்பு குருசாமி, சி. ஆர். தாசு, டி. கே. முனுசாமி, அப்துல் சர்தார் ஆகிய அறுவர்மீது 1-4-60-ல் செங்கற்பட்டு சப்மாசிஸ்டிரேட் கோர்ட்டில் தொடர்ந்த வழக்கில், 13-5-'60-ல் சப்மாசிஸ்டிரேட் அவர்கள் தி. மு. க. தோழர்கள் குற்றமற்றவர்கள் எனக் கூறி விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

கோர்ட்டில் கூடி இருந்த காங்கிரசார் முகத்தைத் தொங்கப் போட்டு நடந்தது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

தோழர்களுக்காக வழக்கறிஞர் திரு. இ. வ. தசரத ராசன் பி. எஸ்சி., பி. எல். அவர்கள் வாதாடினுர்.

தி. ஆ. சண்முகம்,
தி. மு. க. செயலாளர், திருக்கழுக்குன்றம்.

மணிமொழியார் வாழ்க!

[த]மிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவும் சென்ற நாற்பது ஆண்டுகளாக ஓயாது உழைத்து வந்துள்ள அறிஞர் பெருமகனார் காஞ்சி மணிமொழியார் அவர்கள், தொண்டை நாட்டின் தலைநகராகிய காஞ்சி நகரில், தமிழ்ப் புலவரும் சைவ [சம]யத் துணிவணிகருமாகிய திருவாளர் பெருநகர் செங்கல்வராயரின் கடைசி மகனாக 9-5-1900-ல் பிறந்தவர் ஆவார். காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் எஸ். எஸ். எல். சி வகுப்பு வரையில் படித்துத் தேர்ச்சி பெற்றார். ஒவ்வொரு வகுப்பிலும், பொதுவாக எல்லாப் பாடங்களிலும் சிறப்பாகத் தமிழ்ப் பாடத்திலும் முதல் மாணவராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் அப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய தமிழ்ப் பேரறிஞர் வெண்பாப் புலி வேலுசாமிப் பிள்ளையிடம் தமிழ் இலக்கியங்கள் பலவற்றை முறையாகக் கற்றுத் தெளிந்தார்.

மணிமொழியார் அவர்கள், ஒன்பதாவது பத்தாவது வகுப்புகளிற் படித்துக் கொண்டிருந்தபோது, பள்ளிக்கூட மாணவர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகத் திகழ்ந்து பள்ளிக்கூடக் கூட்டங்கள் பலவற்றில் பேசியதோடன்றிப் பொதுக் கூட்டங்கள் பலவற்றிலும் பலரும் வியந்து போற்றும் முறையில் சொற்பொழிவாற்றத் தொடங்கிவிட்டார். அவர் பத்தாவது வகுப்பில் படிக்கும்போது (1918-ல்) மிக்க எதிர்ப்புக்கிடையே பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கம் ஒன்றையும், சர். பி. தியாகராயர் வாசகசாலை ஒன்றையும் தொடங்கி, 1930 வரை அவற்றின் செயலாளராக இருந்து நடத்திவந்தார். நீதிக் கட்சியின் வளர்ச்சிக்காக 1918 முதலே அல்லும் பகலும் பணியாற்றத் தொடங்கிவிட்டார். இவ்வாறாக அவருடைய பொதுவாழ்வு அவருடைய பள்ளிக்கூடப் பருவத்திலேயே தொடங்கிவிட்டது. பள்ளியிற் பயிலும்போதே கச்சிக் கலாவல்லித் தமிழ்ச்சங்கம் என்னும் பெயரில் தமிழ் வளர்ச்சி மன்றம் ஒன்றையும் நூல்நிலையம் ஒன்றையும் தொடங்கிப் பல ஆண்டுகள் சிறப்பாக நடத்திவந்தார். பல பெரும் புலவர்களை வரவழைத்து ஆண்டு விழாக்களைச் சீரிய வகையில் நடத்தியிருக்கிறார்.

அவர் ஒன்பதாவது வகுப்பிற் பயிலும்போதே அவருடைய தந்தையும், பள்ளியிறுதி வகுப்பிற் பயிலும்போது அவருடைய மூத்த அண்ணனும் சிறந்த தமிழறிஞருமாகிய பி. செ. முருகேசரும் இறந்துவிட்டதால், பள்ளியிறுதி வகுப்போடு கல்வியை நிறுத்திவிட்டுத் தந்தையாரின் துணி வாணிபத்தைத் தொடர்ந்து நடத்தலானார். அந்த வாணிப வளர்ச்சிக்காக 1922-ல் பர்மா சென்று இரங்கூன், மாந்தலை முதலிய பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தார்.

தம் சொந்தச் செலவில் 1921-ல் ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கி 9 ஆண்டுகள் திறம்பட நடத்தினார். 1924 முதல் 1927 வரை வாலாசாபாத் இந்து மதப்பாடசாலையிலும் 1927 முதல் 1930 வரை காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பச்சையப்பன் பள்ளியில் அவர் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, திராவிடர் இயக்க வளர்ச்சிப் பணியில் மட்டற்ற உற்சாகத்துடன் உழைத்து வந்தார். பனகல் அரசர், சர். இராமசாமி முதலியார், சுரேந்திரநாத் ஆரியா, டி. வி. சுப்ரமண்யம், ஜே. என். இராமநாதன், ஜே எஸ். கண்ணப்பர் முதலிய அக்காலப் பெருந்தலைவர்களையெல்லாம் அழைத்துப் பல பொதுக்கூட்டங்களை நடத்தியிருக்கிறார். அக்காலத்தில் காஞ்சியில் பொதுக்கூட்டங்கள் கூட்டுவோர், பெரும்பாலும் இவரையே தலைமை தாங்க அழைப்பர். காஞ்சீபுரம் பள்ளியில் அவர் பணியாற்றியபோது அவரிடம் படித்த மாணவர்களில் 'நம் நாடு' பொறுப்பாசிரியர் காஞ்சி கல்யாணசுந்தரன், சென்னை மேல் சட்டசபைச் செயலாளர் திரு. சி. டி. நடராசன் ஆகியோர் சிறப்பாகக் குறிக்கத் தக்கோர் [illegible]வர். தென்னிந்திய செங்குந்த ம[illegible] சங்கத்தாரின் வற்புறுத்தலால் [illegible]ல் பள்ளிக்கூடப் பணியிலி[illegible] அந்தச் சங்கத்தின் [illegible] பிரசாரகராகப் பொறு[illegible] 1930 முதல் 1938 வரை செங்[குந்]தர் சமூக முன்னேற்றிற்காகத் தமிழ்நாடு முழுவதும் பலமுறை சுற்றுப் பயணம் செய்து நூற்றுக்கணக்கான கூட்டங்களில் விரிவுரையாற்றி அந்தச் சமூகத்தில் பெரியதோர் விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அந்தச் சமூக வளர்ச்சிக்காக அவரளவுக்குப் பணியாற்றியவர்கள் வேறு இரண்டொருவரே உண்டு. 1932-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டிற் கொடியேற்றி வைக்கச் சென்று, இலங்கை முழுவதும் இரண்டு மாத காலம் சுற்றுப் பயணம் செய்து ஏராளமான கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார்.

1929-ல் "செங்குந்தமித்திரன்" மாத இதழின் துணையாசிரியராகப் பதவியேற்ற அவர் 1933 முதல் அதன் ஆசிரியராக அமர்ந்து ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகள் அந்த இதழை உயர்ந்த முறையில் நடத்தி வந்தார். அப்போது அவர் தீட்டிய தலையங்கங்கள் சிந்திக்கத் தூண்டும் சிறந்த எழுத்தோவியங்களாய் - உணர்ச்சிச் சித்திரங்களாய்த் திகழ்ந்தன. 1929 முதல் 1933 வரை தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் அமைச்சராக இருந்து அச்சங்கத்தை ஓங்கி வளரச் செய்தார்.

1938-39-ம் ஆண்டுகளில் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது மணிமொழியார் ஆற்றி[illegible]ண்டு பொன்னெழுத்துக்[illegible] பொறிக்கத்தக்க [illegible]ற்றிமை[illegible]காகும். 1938-ல் [illegible] அடிகளார் இந்தி எதிர்ப்புக் [கிள]ர்ச்சியைத் துவக்கி வைத்ததை அறிந்தவுடன், மணிமொழியார், தாம் குடியிருந்த சென்னை பவழக்காரத் தெரு 147-ம் எண் வீட்டிலிருந்து மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றைத் தொடங்கி மாற்றாரும் வியக்கும் வண்ணம் நடத்தினார். சென்னையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் அதுவே. அதுமுதல் நூற்றுக்கணக்கான இந்தி எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தியும் அவற்றில் பேசியும் அந்த இயக்கத்தை வளர்த்தார். அப்போது அப்பணியில் அவருடன் இணைந்து நின்று பேருதவி புரிந்தவர்கள் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களும் மறைந்த மாவீரர் செ. தெ. நாயகம் அவர்களுமே ஆவர். அக்காலத்தில் அரசாங்க அடக்குமுறை காரணமாக, இந்தி எதிர்ப்புப்போர் பற்றிய அறிக்கைகளையும் நூல்களையும் பொதுக்கூட்ட அழைப்பிதழ்களையும் அச்சிட்டுத் தரப் பல அச்சக உரிமையாளர்கள் அஞ்சியபோது, மணிமொழியார் அவர்களே தம் அச்சகத்தில் அவற்றையெல்லாம் அச்சிட்டுத் தந்தார். சுவாமி அருணகிரிநாதர் அவர்களால் இயற்றப்பட்ட தமிழ்த்தாய் புலம்பல் என்னும் கவிதை நூலை, மற்றோர் அச்சகத்தில் எழுத்துக் கோக்கப்பட்டுப் 'புரூப்' கொடுக்கப்பட்ட பிறகு, போலீசு அச்சுறுத்தலால் அந்த அச்சகத்தார் அச்சிட்டுத் தர மறுத்துவிட்டனர். வேறு பல அச்சகங்களும் அவ்வாறே மறுத்துவிட்டபோது, மணிமொழியார் அவர்களே அதனை அச்சிட்டுத் தந்தார்கள் என்பது சிறப்பாகக் குறிக்கத்தக்க நிகழ்ச்சியாகும்.

1937-ல் அவர், அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு நவயுகம் என்ற வார ஏட்டை 'யங் கிரிடிக்சு அசோசியேசன்' என்ற கழகச்சார்பில் தொடங்கி நடத்தினார்.

1947-ல் "போர்வாள்" வார இதழைத் தொடங்கி 1958 வரை மிகச் சிறந்த வகையில் அதை நடத்தி வந்தார். அவரும் அவருடைய முதல் மகனார் மா. இளஞ்செழியன் எம். ஏ. அவர்களும் அதன் இணை ஆசிரியர்களாக இருந்து அந்த இதழை நடத்திய செம்மையையும் சிறப்பையும் கண்டு தமிழகம் மட்டற்ற மகிழ்ச்சி எய்தியது. திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு அந்த ஏடு கிடைத்தற்கரிய ஒரு கருவூலமாகத் திகழ்ந்தது.

1948-ல் அவினாசிலிங்கனார் கல்வியமைச்சராக இருந்தபோது இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கப்பட்டது. அந்தப் போரிலும் மணிமொழியார் முழு மூச்சுடன் ஈடுபட்டார். 17-7-48-ல் சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் மறைமலை அடிகளார் தலைமையில் கூடிய வரலாற்றுச் சிறப்புடைய இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டின் செயலாளராக இருந்து, அம்மாநாட்டை முழு வெற்றி பெறச் செய்தவர் மணிமொழியாரே. பெரியார் ஈ. வே. ரா., மறைமலையடிகள், திரு. வி. க., அறிஞர் அண்ணா, கவிஞர் பாரதிதாசன், நாரண துரைக்கண்ணன், அப்துல்மசித் எம் எல் ஏ, ரெவரண்ட் அருள் தங்கையா முதலிய பல்வேறு கட்சியினரையும் மதத்தினரையும் அந்த மாநாட்டிற் பங்கேற்கும்படிச் செய்த மணிமொழியாரின் செயல் திறமையையும் பேருக்கத்தையும் தமிழகம் ஒரு நாளும் மறத்தல் இயலாது.

1949 சனவரி 15, 16 தேதிகளில் சென்னை பிராட்வேயில் மணிமொழியார் அவர்களே செயலாளராக இருந்து நடத்திய மற்றோர் சிறந்த மாநாடு, திருவள்ளுவர் மாநாடு ஆகும். பேராசிரியர் சக்கரவர்த்தி நயினார், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், அறிஞர் திரு. வி. க, பெரியார் ஈ வே. ரா., அறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தர பாரதியார், டாக்டர் இராசமாணிக்கம், பேராசிரியர் இலக்குவனார் முதலியோர் கலந்துகொண்ட இம்மாநாட்டுக்குப் பிறகே திருக்குறளின் முழுச் சிறப்பையும் தமிழகம் அறிந்து போற்றத் தொடங்கியது நாடறிந்த நற்செய்தி.

— 11-ம் பக்கம் —

மதுரை நகர்
தி. மு. கழகத் தோழர்கள் கூட்டம்

மதுரை மாவட்ட தி. மு. கழக வளர்ச்சி நிதிக்காக சூலைத் திங்கள் 10-ம் நாள் அறிஞர் அண்ணா அவர்களும் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களும் நடிக்கும் "சந்திர மோகன்" நாடகம் வெற்றியுடன் நடைபெற மதுரை நகர் தி. மு. கழகத் தோழர்கள் கூட்டம் 15-5-'60 ஞாயிறு மாலை 5 மணியளவில் தொ. க. துரைஅரசு அவர்கள் இல்லத்தில் கூடியது. அதுபோது மாவட்டச் செயலாளர் எஸ். முத்து அவர்கள் கழகத்தின் எதிர்கால வேலைத்திட்டங்களைப் பற்றியும் கூட்டத்தின் நோக்கத்தையும் எடுத்துக் கூறி, டாக்டர் அருணசலம் அவர்களைத் தலைமை தாங்கக் கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, தொ. க. துரைஅரசு, ஆ. இரத்தினம், பு. செங்குட்டுவன் ஆகியோர் நாடகம் வெற்றியுடன் நடைபெறவும் கழகம் வளர்ச்சியுறவும் தத்தமது கருத்துக்களைக் கூறினர். கூட்டத்தில் நாடக ஆக்க வேலைகளுக்காக ரூபாய் 2000 வசூலாகியது. நாடகத்தை வெற்றியுடன் நடத்த டாக்டர் அருணசலம் அவர்களைத் தலைவராகவும், மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, ஆ இரத்தினம் ஆகியோரை இணைசெயலாளர்களாகவும் தொ. க. துரைஅரசு அவர்களைப் பொருளாளராகவும் மற்றும் ஐந்து பேரை உறுப்பினராகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. தேனீர் விருந்துக்குப்பின் கூட்டம் இனிதே முடிந்தது.

தென்றல்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 21-5-'60 ‖ இதழ் 49

"காங்கிரசு உம் வீட்டுச் சொத்தா?"

-தியாகியின் கேள்வி!

" 'எல்லோரும் ஓர் குலம்! எல்லோரும் ஓரினம்!' என்றாரே பாரதியார்! ஆகா! தேனொழுகும் இந்தக் கீதமே, தேசத்தைத் தட்டி எழுப்பும் இந்த நாதமே, நமக்கெல்லாம் வழிகாட்டி! நம் குடும்பம் ஒரு நற்குடும்பம்! அனைவரும் அண்ணன் தம்பிகள்! ஒற்றுமையும் பேரன்புமே நம்மை வாழ வைக்கின்றன!

'காக்கை குருவி எங்கள் சாதி!' என் ... வை ... வெட்கித் த... அழகிய ஒற்றுமையை வகுத்துக்காட்டி, உ ... !

அன்னை பாரதமாதா நம்மின் ஒற்... கிதமடைகிறாள். அவள் மகிழ்ச்சியெல்லாம் ... பெருகிப் பொங்க, நாம் நீடித்துழைப்போம்!

ஒன்றுபட்டு நிற்போம்! பகையை வென்றுவிட்... ஓய்... அப்... தான் நாம் ஒரு குடும்பத்துப் பிள்ளைகள் என்ற சொல்லுக்கு மதிப்புண்டு!"

—முன்னொரு நாள் இப்படி முழங்கினர், பாரதமாதா பெற்றெடுத்த மாணிக்கங்கள்!

"பரங்கியனை விரட்ட முனைவது பதவி ஆசையோடா? இல்லை! இல்லை! பாரதமாதாவின் விலங்கொடிய வேண்டும்! பின்னர் பதவிக்கு யார் வந்தாலென்ன? போனாலென்ன? பண்டாரமாக, பக்கிரியாக, பற்று ஏதும் அற்றவராகக் காந்தியார் அலைவதைப் பார்த்த பின்னுமா, உங்களுக்கு ஐயம்?

இருந்த இடத்திற்கே தேடிவரும் பதவிகள், அவர் விரும்பினால்! என்றாலும் அவர் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. சொந்தக் கட்சியிலேயே அந்த சாந்தமுனிவர் எந்தப் பதவியும் எதிர்பார்த்ததில்லை! அவரைப் பின்பற்றி வந்த நாங்களா பதவிக்காசைப்பட்டுப் பரங்கியரை விரட்டினோம்?"

—இப்படியும் பேசினர் பின்னொரு காலம்!

எல்லாம் உணர்ச்சி வெள்ளங்களாய், வார்த்தையில் மட்டும் வடிவம்பெற்ற புரட்டுப் பேச்சுக்களாய்ப் போய்விட்டன.

அத்தனையும் ஏமாற்றுக்காரர்களின் வாய்ப்பந்தல்கள் என்பதைத் தமிழகத்தாரும் பிறரும் உணர அவ்வப்போது பல நிகழ்ச்சிகள் நடந்துவருகின்றன.

காந்தியார் வாழ்ந்த நாட்களிலேயே அவரின் கூடாரம் ஆடியது. பொருமையை ஒழிக்கப் போதனைகள் பல செய்தார். என்றாலும் பதவிப்போட்டிகள் மாயவில்லை; ஓயவில்லை. காந்தியாரின் புன்னகை பலத்தில் கட்டுண்ட ஏடுகள், அவற்றை மறைக்கவும் செய்தன.

வங்கத்தலைமகன், காந்தியாரின் போக்குடன் ஒத்து ஊத மறுத்தவர். அதனால் அவர் காங்கிரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட ஞான்று, காந்தியாரின் ஆதரவோடு பட்டாபியை நிறுத்திவைத்தனர். காந்தியார் கனவு தோற்றது. திரிபுராக் காங்கிரசில் தலைவரிடத்தை அடைந்தார், தோழர் சுபாசு சந்திரபோசு.

பின்னர், தாண்டன் தலைவரானபோது அவர் சந்தித்த போட்டிகளையும் அறிவோம். பட்டாபி தான் வெல்வதற்காகப் பட்டபாட்டையும் அறிவோம். இந்தப் பதவிப் போட்டிகளை சனநாயகச் சம்பிரதாயங்களுக்கூடே வரக்கூடிய சிறு நிகழ்ச்சிகள்தான் என்று கூறித் தப்பித்தனர்.

"தமிழ்நாடு காங்கிரசு" என்ற அளவிலே எடுத்துக்கொ... கோபாலாச்சாரியார் குழுவினருக்கும், சத்தியமூர்த்தி குழுவின... வந்த சச்சரவுகள் பலப்பல. காமராசரைக் கடைசிவரை எதிர்த்துப் ... கோவை சுப்பையாவின் முயற்சிகளையும் தமிழகம் அறியும். ஏடுகளி... வந்து, நாடு சிரிக்கத்தக்க அளவுக்கு வளர்ந்தன அவர்களின் மயிர்ப்... கள். அதையும் பூசி மெழுகி மறைக்க முயன்று அன்னார் தோற்ற க... அறிவோம்.

இவை எல்லாம் பாரதமாதா சுதந்திரமாதா ஆவதற்குமு... நிகழ்ச்சிகள்.

துணைக்கண்டத்தை விட்டு வெள்ளையன் வெளியேறிய பின்னுநிலும் ... காங்கிரசாரிடை அமைதி நிலவியதா?

கிடையாது! கிடையாது! அங்கங்கே போட்டிக் காங்கிரசார் பெருகினர். உத்தரப்பிரதேசமும் பாஞ்சாலமும் தொடர்ந்து பல சம்பவங்களைச் சந்தித்தன. ஆந்திரத்தில் கோபாலர் பல தொல்லைகளை உருவாக்கினர், மறைமுகமாக. அத்தனையும் அறிந்த பண்டிதர் சஞ்சீவிக்குக் கைகொடுக்க, கோபாலரைத் தன்னிடம் இழுத்துக்கொண்டார். என்றாலும், சென்னா ரெட்டி கிளம்பி தொடர்ந்து தொந்தரவு தந்தார் சஞ்சீவியார்க்கு.

மலைஞாலத்தில் பனம்பள்ளிக்கும் மாதவமேனனுக்கும் இருந்த பதவிக் காய்ச்சல்களையும் அறிவோம்.

தமிழகத்தில் நிகழ்ந்த சம்பவங்களையும், காங்கிரசார் பரிமாறிக்கொண்ட மரியாதைகளையும் அறிவோம்.

இப்போதும் இந்தியா வெங்கும் பதவிச் சண்டைகள் வளர்ந்து தலைவிரித்தாடுவதைக் காண்கிறோம்! அண்மையில் காங்கிரசுக் கட்சிக்குள் நடந்த தேர்தல்களில் விளைந்த குழப்பங்களும் பலத்த போட்டிகளும் நம்மால் அறியப்பட்டனவே. காந்தியார் பரம்பரையல்லவா? பின் எப்படியிருக்கும்? "கலகம் பிறந்தால் தான் நியாயம் பிறக்கும்!" என்று முதுரை தருபவர்களல்லவா ...வர்கள்!

...கெங்கும் காணினும் குழப்பம் என்றேன். இதோ, அதற்கு ஓரிரு ...

...அண்மையில் நடைபெற்ற மலைஞாலக் காங்கிரசுத் தலைவர் பதவிக்கான ...டியில், பதவி வெறியோடு வகுப்பு வெறியும் கைகோத்தாடியிருக்கிறது. ...ஞால உதவி முதல்வர் தோழர் சங்கர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்பதை அறிவீர். மலைஞாலக் காங்கிரசில், வகுப்பு வெறிகொண்ட மன்னத் பத்மனாபனின் ஆதிக்கத்தால், மேல் வகுப்பாரே காங்கிரசுத் தலைவராக வர வேண்டும் என்று பலத்த முயற்சிகள் எழுந்தனவாம். சங்கரும் தனது ஆள் ஒருவரை நிறுத்தி வேடிக்கை பார்த்திருக்கிறாராம். அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் தோழர் சஞ்சீவி அவர்கள், அத்தேர்தலை எவ்விதப் போட்டியுமின்றி நடத்த எவ்வளவோ முயன்றாராம். எனினும் எட்டுப் பேர் போட்டியிட்டனராம். இறுதிக் கட்டத்தில் ஐவர் போட்டியிட்டு, கடைசியாக சி. கே. கோவிந்தன் நாயர் என்பார் வென்றிருக்கிறார். போட்டி முடிவுக்கு வராமல் மூன்று முறைகள் வாக்கெடுப்பு நடந்திருக்கிறது. மழைவிட்டும் தூவானம் விடாததுபோல, தேர்தல் முடிந்தும் இந்தக் குழப்பம் ஓயவில்லை. ஒவ்வொருவர் சார்பிலுள்ள ஏடுகளும் அடித்துக்கொள்கின்றன. கேரளத்திலும் கோர நிலை!

கருநாடகத்தில் நிசலிங்கப்பாவுக்கு எதிராக, வேறு பல குழுவினர் கொடியுயர்த்தியிருக்கின்றனர். தேர்தல் நடந்த இடத்தைப் பார்வையிட வந்த பொது மக்கள், ஒரு பெரிய கலகத்தைக் கண்டு கைதட்டி மகிழ்ந்திருக்கிறார்கள். தேர்தலைப் போட்டியின்றி நடத்தினால்தான் மதிப்புத் தங்கும் என்று நினைத்த காங்கிரசு மேலிடத்தார் கே. சி. ரெட்டியாரையும், யு. எஸ். மல்லையாவையும் கருநாடகக் காங்கிரசுத் தலைவர்களைக் கண்டு பேச அனுப்பினர். போட்டி வெறியுடன் திரிந்த ஒவ்வொரு குழுவின் தலைவரையும் அன்னார் கண்டு பேசியும், யாரும் விட்டுக் கொடுக்க முன் வரவில்லை. மண்டலக் காங்கிரசுத் தேர்தல்களுக்கே தெருச் சண்டையிட்டுக்கொண்ட இவர்கள், மாகாணக் காங்கிரசுத் தலைமைக்கா விட்டுக் கொடுப்பார்கள்? முதலமைச்சர் சட்டியும் அவர் தம் அமைச்சர்களும், சன்னையாவின் கும்பலும் கூடி நாகையா ரெட்டி என்பவரை நிறுத்தி வைத்தனர். அமைச்சரவைக்கு எதிரணியில் உள்ளவர்கள் தோழர் நிசலிங்கப்பாவுக்குத் துணை வந்தனர். நிசலிங்கப்பா 121 வாக்குகள் பெற்று எதிர்த்து 85 வாக்குகள் வாங்கியவரைத் தோற்கடித்திருக்கிறார். ஒரு ஓட்டுச் செல்லவில்லை. 13 பேர் வாக்களிக்கவே வரவில்லை. நிசலிங்கப்பாவின் வெற்றி, நில வருமான அமைச்சர் கடிலால் மஞ்சப்பா, முதலமைச்சர் சட்டி முதலியோரை நடுங்க வைத்திருக்கிறது. "இனி, பிரதேசக் காங்கிரசுக்காரர்களுக்கு அடங்கித்தான் அமைச்சரவை செயல்பட வேண்டும்!" என்ற நிலை உருவாகியுள்ளது. கருநாடகத்தில் முளைத்திருக்கும் இந்தச் செய்தி எதைக் காட்டுகிறது?

—10-ம் பக்கம்—

[illegible]டமன்றம் சிறந்ததும் நம்மாலே'!
மந்திரி பேசியதும் நம்மாலே !

[illegible]ன் இதழ்த் தொடர்ச்சி —

[illegible]ராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது எத்தனையோ பழிச் சொற்கள் சட்டமன்றத்தின் உள்ளேயும் நாட்டின் பல பகுதியிலும்-இருந்தாலும் கழகத்தின் குரல், அங்கே கலங்கவில்லை. நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டிய நாட்களில் சென்னை அமைச்சர்கள் அதிகாரக் கோமான்களாகக் கோட்டைக்குள்ளே இருந்தனரா? யார் யாரையோ அழைத்து-எவர் எவருக்கெல்லாமோ ஆட்களை அனுப்பி. அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே தூது அனுப்பிவிட்டார்கள்-கருப்புக்கொடி நிகழச்சியைக்கைவிட வேண்டுமென்று கேட்டு! அமைச்சர்களிடத்திலே அன்று அதிகாரமிருந்தும்கூட, கோட்டைக்குள்ளேயிருந்த ஒரு "கைதி"யினிடத்திலே அடி பணிந்து வேண்டினார்கள். அந்தக் கண்ணிய அண்ணன் பொதுச் செயலாளரைக் காட்டி அனுப்பிவிட்டார்! அதன் பிறகு சட்டமன்றத்திலே சர்க்காரைச் சந்தித்தார்! அந்த நேரம் எல்லாப் பகுதியிலேயிருந்தும் சுடு சொற்கள் வீசினார்கள்! அறிஞர் அண்ணா அவர்கள் அங்கே ஒரு பிரச்னையாக்கப்பட்டார்! நல்ல காங்கிரசுக்காரர்கள் நாட்டுப்பிரிவினையை விட்டு ஒற்றுமைக்கு வழி காட்ட வேண்டுமென்று இதயம் திறந்து பேசியதும் அப்போதுதான்! அன்றைய தினம் அறிஞர் அண்ணா அவர்கள் அளித்துள்ள அறவுரைகள் சட்டமன்றத்தின் மாண்பை உயர்த்தி விட்டன. எத்தனையோ இழி மொழிகளுக்கு அங்கே இனிமை நிறைந்த வார்த்தைகளையே பதிலாகத் தந்தார்! ஒரு விடுதலைப் படையின் வீரத் தலைவருக்கு ஒப்புதல் தந்தது போல சட்டமன்றம் அமைதி காத்தது என்பதைக் கண்டவர்கள் ஒப்புக்கொள்வர். எதிர்க் கட்சியினரின் கண்டனங்களைத் தாங்கிப் பழக்கப் பட்டுவிட்ட காரணத்தால், கனிமொழிகளைக் காட்டிலும் கடு மொழிகளையே அதிகமாக விரும்பி ஏற்றுக்கொண்டார். ஆணவக் குரல் தரும் ஆட்சியாளரும் ஆடிக் களைத்துப் போவது அதனாலேதான்! தேசிய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் மிருக பலத்தினால் நிறைவேற்றப்படும் என்பதையும், எதிர்க்க வேண்டிய எதிர்க் கட்சியினர்கூட "எதிர்க்க மாட்டோம்; எங்கள் ஆதரவு சர்க்காருக்கே!" எனச் சொல்லிவிட்ட நேரத்தில் தனிக் குரல் கொடுத்து ஆதரவாளரின் பொய்க் குற்றங்களை விளக்கியதும் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் மாற்றுரைகளைத் தந்தும் முன்னேற்றக் கழகம்தான்! அந்திக்குத் துணை போன அமைச்சர்கள் அன்றுதான் அறிஞர் அண்ணாவின் ஆற்றலை உணர்ந்தனர்-பெரியாருடன் பேதங் காட்டுவது பேதமை என்றும் கதராடையினர் கண்டனர்!

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆண்டு சட்டமன்றத்து நிகழ்ச்சிகளில் பெரும் பேற்றினைக் கொள்ளும் வகையில் பொறுப்பேற்று விட்டது. இந்தியத் துணைக்கண்டத்து வரலாற்றிலே இல்லாத வகையில் முன்னேற்றக் கழகத்தின் செயல் முறைகள் புதிய வரலாறு உருவாகச் செய்துவிட்டன. வழக்கம்போலவே இந்த ஆண்டும் கவர்னர் உரையினைக் கேட்பதற்கு விரும்பவில்லை. அந்த நேரத்தில் கலந்துகொள்ளவில்லை! காங்கிரசுக்கட்சிக்குச் சென்ற ஆண்டுகளிலே இல்லாத பெருங்கவலை இந்த ஆண்டு மட்டும் துள்ளியெழுந்தது சபாநாயகர் சட்டமன்றங்களை ஆய்ந்தார். பிரிட்டனுடைய பழங்காலப் பெருமைமிக்க சான்றுகளைக் காட்டி முன்னேற்றக் கழகத்தின் செயல்முறை பாராளுமன்றப் பண்புகளுக்குப் பழுதுண்டாக்கவில்லை. பங்கமேதும் ஏற்படவில்லை. பழிப்பதற்கும் வழியில்லை எனச் சொல்லிவிட்டார்! கவர்னர் உரை கண்டனத்துக்குரியதென்ற கழகத்தின் குரலைக் கம்யூனிஸ்ட்களும் மற்ற கட்சியினரும் கருத்திலே கொண்டு பேசினார்கள்! இந்திய குடியரசுச் சட்டம் முன்னேற்றக் கழகத்தை வளைவித்துவிட இயலவில்லை. வஞ்சிக்கவும் முடியவில்லை! சென்னை மாநகராட்சியின் கண்டனத் தீர்மானமும் சட்டசபையின் கவனத்திலே இருக்கிறது. இப்படியாக முன்னேற்றக் கழகம் இல்லையெனில், தமிழ்நாட்டு அரசியல் அழகுற அமையப் போவதில்லை என்பதை நடை முறைகள் புலப்படுத்தி வருகின்றன. சட்டமன்ற[illegible] செலவுத்திட்டம் முக்கி[illegible] அமைந்தது. அண்ணா கசாப்பு[illegible] வைக்கச் சொல்லிவிட்டார் [illegible] கேலிமொழி பேசிக்கொண்டிருந்த அமைச்சரை, சரியான சமயத்தில் சட்டமன்றத்திலேயே சிக்கவைத்துக் கொண்டார் அண்ணா! அமைச்சர் மலம் சேர்த்து உரம் தயாரிப்பதைப் பெருமையாகச் சொன்னார்! "மலத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி விட்ட அமைச்சர்தான் கசாப்புக்கடை வைக்கச் சொன்னேன் என்று ஆத்திரப்பட்டார். முனிவர்கள் மும்மலத்தைக் கடந்தனர். இங்கே ஒரு மலத்தையாவது கடந்தீர்களே!" என்ற வகையில் மதிப்பிட்டுக் காட்டினார்! தன்னுடைய பதிலுரையில் அமைச்சரின் அதிகாரம் பேசவில்லை; அகராதியிலேயில்லாத வார்த்தைகளைத் தேடி அலையவில்லை. அண்ணாவின் விளக்கத்தை விவாதிக்க விரும்பாமலே விடையுரையை முடித்துக்காட்டினார். சூடுகொண்ட காங்கிரசுக்காரர்களுக்குக் கலக்கம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் நாட்டு மக்களின் நலன் உயர்த்தும் காரியங்களிலே சர்க்கார் கவனங்கொள்ள வேண்டுமென்று நினைவூட்டவே பயன்படுத்திக்கொண்டனர். நிலத்திற்கும் உடைமைக்கும் உச்சவரம்பு கட்டும் மசோதாவைச் சட்டமாக்குவதற்கு சர்க்காரின் பெரிய முயற்சிகளின் உருவம் இப்போதுதான் வெளிப்பட்டது. அண்ணாவும் ஏனைய உறுப்பினர்களும் இந்தச் சட்டத்தின் போலித் தன்மையை மிகவும் அழகுறச் சொன்னார்கள். முன்னேற்றக் கழகத்தவர் என்றால் நிலப் பிரபு பி. டி. ராசனின் சொந்தக்காரர்கள் என்று மறக்காமல் சொல்லிக்கொண்டிருந்தவர்களே, முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்துக்களை 'முற்போக்குப் பாதையில்' தெரிவித்திருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள்! நிலப் பிரச்னையும் தொழிற் சங்கமும் தெரியாதென்று மதிப்பிட்டவர்கள்கூட, முன்னேற்றக் கழகம் பேட்டைவாய்த்தலை சர்க்கரை ஆலை தொழிலாளர் போராட்டத்தில் பங்கேற்பதைப் பாராட்டினர். 'அண்டா குண்டா'ப் பற்றிப் பேசிய தியாகராசர் [illegible]ள் எல்லா[illegible]குந் [illegible]ளர் [illegible]ளி [illegible]ண் [illegible]னத்தில், [illegible] கண்டனக் [illegible]வை [illegible] கம்யூனிஸ்ட் [illegible] கரங் குவித்[illegible]ர்! பரவை மீனாட்சி ஆலையை மூடிவிட்டார்கள். மில் முதலாளிகளின் புன்னகையைப் பெரிதாக மதிக்கும் சீமான்களாக இருக்கும் அமைச்சர்கள், தொழிலாளர்களின் இதயம் வடிக்கும் இரத்தக் கண்ணீரையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நினைவூட்டியதிலும் கழகம் பின்னடையவில்லை. மற்றவர்கள் எவராலும் பின்னுக்குத் தள்ளப்படவில்லை. தமிழ் நாட்டில் சங்கு வளையல் தொழிற்சாலை, போலி விளம்பரங்களைத் தடுத்தல், மாவட்ட மன்றப் பள்ளிகளின் எதிர்காலம், அஞ்சல் உறையில் திருவள்ளுவர் படம், பிரயாணிகள் விடுதிகளின் பணிகள், எதிர்க்கட்சி ஏடுகளுக்கு சர்க்கார் விளம்பரம் தரப்படாமல் தடை செய்தல், கிராம அதிகாரிகளின் அவல நிலை, நிலவரித் துறையின் நிர்வாக நிலைமை. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம், சேலம் இரும்பு அலுமினியத் தொழிற்சாலை, சாகுபடி செய்யப்படாமலிருக்கும் நிலகணக்கு, தோப்புத் துறை-தூத்துக்குடித் துறைமுகப் பணிகள், ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு, மேரி அரசி கல்லூரியில் நடைபெற்ற பணக் கையாடல், பொருட்காட்சிகளில் அரசாங்கப் பங்கு. வரப்போகும் பாசனத் திட்டங்கள், சமுதாய நலத் திட்ட வேலைகள், கட்டாயக் கல்வி முறை, பன்னீர்ச்செல்வம் பிள்ளைகள் கல்வி நிதி ஆதாரத் தொழிற் பயிற்சிக் கருவிக் கிடங்குகள் போன்ற செய்திகளையெல்லாம் கழக உறுப்பினர்கள் விவாதித்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை சட்டமன்றத்தில் மிகச் சிறந்த பணிகளில் பங்கேற்றிருந்தாலும் ஆளுங்கட்சியினர் ஏற்றுக்கொள்ளத் தவறுகின்றனர். தயங்குகின்றனர் டில்லியின் தாக்கீதுகளுக்கு மட்டும் தலைவணங்குமவர்கள், தாயகத்தின் புகழ் நிலைக்க என்றும் நினைக்கவும்மாட்டார்கள்! ஆனால் தமிழ்நாட்டு அரசியலிலும் துணைக் கண்டத்தின் எண்ணக்கிளர்ச்சியிலும் முன்னேற்றக் கழகம் முக்கியமான கண்காணிப்புக்குரிய விடுதலை இயக்கமாக இருப்பதை இனியும் உணராதவர்கள் வருங்காலத்தில் வேதனைப்படுவர்! நம் குரலில் பேசுகின்ற மாற்றுக்கட்சியினர் அனைவரும் வருங்காலத்தில் நம்முடைய அணி வகுப்பில் இடம் பெறுவிட்டாலும் நம்முடைய விடுதலை வேட்கையினை ஏற்றுக்கொள்ளும் துணிவுக்காவது நிச்சயமாக நெருங்கிவிடுவார்கள். சென்னை மேல்சபையில் நடிப்பிசைப் புலவர் இராமசாமி நற்பணியாற்றிப் பெருமையினை உயர்த்துவார்! பி. டி. இராசனார் நம்மாலே மேல்சபைக்கு உயர்த்தப்பட்டவர். "அண்ணாவுடன் ஒரு ஆறுபேர்கள் பட்டுமே இருந்தால் சட்டமன்றம் அழகு பெறும்; அறிவு நிறையும்!" என்று அன்றோர்நாள் சொல்லி அதனை இன்று அறிந்திருப்பவர். நம்மையே பலி கேட்கிறார்; வேலியோரத்தில் நிற்கும் போலிகளை நம்பவேண்டுமென்று நமக்கே கூறுகிறார்-இன்று! நம்மாலே பெற்றுக்கொண்ட பதவியை இழந்துவிடும்வரை நன்றி சொல்லாமலிருப்பது அவருடைய பண்புக்கு அழகாகும். இவர்போன்ற இரவல்களையெல்லாம் மறந்துவிட்டு நம்முடைய இலட்சியப்பணி நடைபெற்றாக வேண்டுமென்பதை நமக்கு எச்சரிக்கவே இத்தகு செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. கழகத்தின் நாட்டுப்பணியும் மக்கள் மன்றத்திலே கிடைத்துள்ள பெருமையும் சட்டமன்றத்திலே கிடைத்துள்ள சான்றாண்மையும் என்றைக்கும் இழந்துவிட முடியாதவைகள்! சட்டசபையிலே சாதனைகள் இல்லை என்று சலிப்புச் சிந்துபாடுவோர் பக்தவத்சலமாக இருந்தாலும், அவருக்குப் பதவி கொடுத்துக் காப்பாற்றும் காமராசராக இருந்தாலும், இவர்கள் இருவரையும் ஏற்றிப்போற்றி நத்திப் பிழைக்கும் கக்கன் சொக்கன் வகையறாக்களாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் நாம் விடுக்கும் வேண்டுகோள்; அன்பு விண்ணப்பம் இது: மக்களை மதிக்காத நீங்கள் – மன்றத்திலேயிருக்கும் நாங்கள் தரும் சேதிகளை, கேட்டாகிலும் தெரிந்து கொள்வீர்!

(முற்றும்)

நெய்வேலி நிலக்கரி இலாபகரமானதே !

சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப்பொருளையும், நெய்வேலி நிலக்கரியையும் உபயோகித்து இரும்பு தயாரிக்க முடியுமென்று கூறி அதற்கான திட்டமடங்கிய பூர்வாங்க சிபார்சுகளைக் கிழக்கு செர்மன் நிபுணர்கள் சென்னை சர்க்காரிடம் தந்தனர். இரும்பு தயாரிப்பு சாத்தியமென்றும் இலாபகரமானது என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். இந்திய சர்க்கார் தொழில் நுணுக்கக் கமிட்டியுடன் விவாதித்தபிறகு இந்த நிபுணர்கள் தங்களது இறுதி அறிக்கையைச் சர்க்காருக்கு சமர்ப்பிப்பார்கள்.

—செய்தி

அவனைக் கண்டவுடன் அவள் ஆடாது அசையாது அச்சடித்த பதுமைபோல நின்றுவிட்டாள். என்ன கவர்ச்சியான முகம்! அவள் இப்படிப் பட்ட எழில் நிறைந்த ஆடவன் உருவத்தை இதற்குமுன் கண்டதே யில்லை என்று சொல்லலாம். ஆனால் அப்படி ஒரேயடியாக அறுதியிட்டுச் சொல்லிவிடவும் முடியாது. ஏனெனில் அவள் சிறுமியாயிருந்தபோது பள்ளிச் சிறுவர்கள் பலரைக் கண்டிருக்கிறாளே தவிர, தெருவில் பலப் பலரைக் கண்டிருக்கிறாளே தவிர. பெரியவள் ஆன பிறகு, அவள் தன் தந்தையை யும் அவரோடு தொடர்புடைய ஒரு சிலரையும் தவிர எந்த ஆடவரையும்- அதிலும் இளைஞர்கள் யாரையும் பெரும் பாலும் கண்டதில்லை.

அப்போது அழகே வடிவான அந்த இளைஞனின் கவர்ச்சிகரமான முகத் தைக் கண்டதும் அவள் அப்படியே பிரமைக் கலக்கம் அடைந்து நின்று விட்டாள். சற்று நேரத்திற்குப் பிறகு தான் அந்த இளைஞனுடைய மண்டை அங்கு கீழே கிடந்த கருங்கல் ஒன்றிலே மோதிக் காயம்பட்டு இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்ததை அவள் கவனித் தாள்.

இரத்தத்தைக் கண்டதும் அவ ளுக்கு ஒரே பயமாகப் போய்விட்டது. "அம்மா!" என்று கூவிக்கொண்டே வீட்டுக்குள் ஓடிவந்தாள். இராமாய ணத்தில் சடாயு வதைப் படலம் படித் துக்கொண்டிருந்த மரகத அம்மா, மகள் கூச்சலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். திக்கித் திணறிக்கொண்டே, தங்கம் தான் கண்ட காட்சியைப் பற்றிக் கூறினாள்.

யாரோ தலையில் அடிபட்டு இரத்தம் சிந்தி மயக்கமாகக் கிடக்கிறான் என்ற உடனே, இரக்கச் சிந்தனை நிறைந்த மரகத அம்மாளின் இதயம் இளகியது.

"பாவம்! யார் பெ... வா, போய்ப் ... கூறித் தங்கத்தை ... கொண்டு தோட்டத்திற்குள் ...

அங்கே அந்த இளைஞன் கிடந்த நிலையைக் கண்டதும், உடனடியாக அவனுக்கு மருத்துவ உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மரகத அம்மாளுக்குத் தோன்றியது. அவள் தன் மகள் உதவியுடன் மெல்ல மெல்ல அவனைத் தூக்கிக்கொண்டு வந்து வீட்டின் உள்ளே கிடத்தினாள். தலையில் இருந்த காயம் அப்படி ஒன்றும் பெரிய தாகத் தோன்றவில்லை. மரகத அம் மாள் தனக்குத் தெரிந்த முறையில் காயம்பட்ட இடத்தைக் கழுவித் துடைத்து மஞ்சளை அரைத்து வைத் துக் கட்டினாள். பிறகு, உடலில் வேறு எங்கேனும் காயம்பட்டு இருக்கிறதா என்று கவனித்தாள். எவ்விதமான காயமும் இல்லை. தாயும் மகளும் உணா வற்றுக்கிடந்த அந்த இளைஞனின் உடலைப் பரிசோதித்துக் கொண்டிருந்த போது தங்கம் திடீரென்று "அம்மா!" என்று திகைப்போடு கூவினாள்.

"என்னடி தங்கம் என்ன?" என்று பதற்றத்தோடு கேட்டுக்கொண்டே மரகத அம்மாள் அவளை நோக்கினாள்.

"இங்கே பாரம்மா!" என்று தங்கம் சுட்டிக்காட்டிய இடத்தைத் தாய் நோக் கினாள். அது அந்த இளைஞனின் இடது கை. அந்த இடதுகை தோளில் துவங்கி மணிக்கட்டின் சற்றுக் கீழோடு முடிந்திருந்தது. அதற்கப்புறம் முழு உள்ளங்கையையோ அதில் அடங்கிய ஐந்து விரல்களையோ காண முடிய வில்லை. பாதிவரை எரிந்து கரிந்து போன விறகுக் கட்டை யொன்றின் நுனியைப் போல அந்த இடது கையின் நுனிப் பாகம் விளங்கியது.

"ஐயோ பாவம்!" என்ற வார்த் தைகள் ஆயாசப் பெருமூச்சோடு மரகத ... வெளிப்பட் ... பிள்ளைக்கு ...'' என்று அவள் ...ருந்தியது. அதே எண்ணம் தங்கத்தின் உள்ளத்திலும் ...ழ்ந்து கொண்டிருந்தது. "ஆண் டவன் படைப்பில் எதுவுமே பூரணத் துவம் அடைவதில்லையோ!" என்று அவள் மனத்திலே ஐய வினா எழுந்து நின்றது. அவளுக்கு ஆண்டவனிடத் தில் அபார நம்பிக்கை!

சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த இளைஞன் மயக்கந் தெளிந்து கண் களை அகல விரித்துச் சுற்றுமுற்றும் நோக்கினான். அவன் பார்வையிலே ஒருவிதமான மிரட்சி தோன்றியது.

"நான் எங்கிருக்கிறேன்?" என்று பயந்துகொண்டே கேட்டான்.

"ஏன் தம்பி பயப்படுகிறாய்? நீ இங்கேதான் இருக்கிறாய். தைரியமாகப் பேசு" என்று மரகத அம்மாள் கூறினாள்.

"அந்த இராட்சசி போய்விட்டாளா? இன்னும் அங்கேதான் இருக்கிறாளா?" என்று கேட்டான் அவன்.

"என்ன தம்பீ சொல்கிறாய்?" என்று விளங்காமல் கேட்டாள் மரகத அம்மா.

"நான் மல்லிகையரும்பு பறிக்க வந்தேனே, அப்போ ஒரு இராட்சசி என்னை விரட்டிக்கிட்டு வந்தாளே, அவ இன்னும் அங்கேதான் இருக் கிறாளா?" என்று திரும்பவும் கேட்டான் அவன்.

தன்னைப் பார்த்தால் அவனுக்கு இராட்சசி போலவா தோன்றுகிறது என்று மனதிற்குள் சிணுங்கிக்கொண் டாள் தங்கம்.

"என்ன தம்பி உளறுகிறாய்? இராட் சசியாவது, விரட்டுவதாவது?" என்று கேட்டாள் மரகத அம்மா.

"இல்லேம்மா, கமலம் அப்படித் தான் சொன்னாள். அவள் சொன்ன படியே இராட்சசி என்னை விரட்டிக் கொண்டு வந்தாள்" என்றான் அவன்.

மண்டையில் அடிபட்டதால் அவன் குழம்பிப் பேசுகிறான் என்று நினைத் தாள் மரகத அம்மா. ஆனால், தன்னை அவன் இராட்சசி என்று குறிப்பிட்டது தங்கத்திற்கு மிகவும் உறுத்தலாயிருந் தது. கமலம் என்ற பெண்ணைப்பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். ஒரு பெண்ணுக்கு வேண்டிய அடக்க ஒடுக்கங்கள் எல்லாம் அந்தக் கமலத் திடம் கிடையாது. பெரிய ...ம்புக் காரி. யாரையாவது வம்புக்கிழுப்பது, யாரிடையேயாவது சண்டை மூட்டி விடுவதும், கோள் சொல்வதும் கமலத் தின் உடன்பிறந்த பழக்க வழக்கங்கள். கமலம் தன்னைப்பற்றி அந்த இளைஞனி டம் மோசமாகச் சொல்லியிருக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றி யது.

"இதோ, பாருங்கள், என்னையா இராட்சசியென்று சொன்னாள்?' என்று கேட்டு அவனை உற்று நோக்கினாள் தங்கம். அவனும் தங்கத்தை உற்று நோக்கினான்.

"ஐயையோ! நீ எவ்வளவு அ... யிருக்கிறே! உன்னைப் பார்த்... வது இராட்சசி என்... களா? உண்மையான ... தான் சொன்னாள்" என்று... லடிபட்டுக் கிடந்த அந்த ...

"பாவம்! அடிபட்டு மூ... போயிருக்கிறது. அதிகம் ... கொடுக்காதே தங்கம்!" ... கடிந்துகொண்டாள் மரகத அ...

"அதெல்லாம் இல்லேம்ம... கலங்கவும் இல்லே, ஒண்ணு... உள்ளபடியேதான் சொல்லு...

பெற்ற வயிறு

சோறுடைத்த நல்லூரின் சுகவாசிகளில நான் முதன்மையானவன். இந்தச் சோறுடைத்த நல்லூரைச் சேர்வதற்குமுன்பு என்னைச் சுற்றியிருந்த சூழ்நிலைகள் இந்த ஒருவருக்கும் தெரியாது, நான் சொன்னலொழிய!

அதோ தெரிகிறதே "ஓலைப்பட்டி"க் கிராமம். அதில்தான் நான் பிறந்தது - வளர்ந்தது - பெற்ரோரின் அரவணைப்பில் மிதந்தது எல்லாம்! பல ஆண்டுகளுக்குமுன்பு, அதாவது எனக்குப் பத்தாவது வயதுவரை, இன்று நான் இப்படிப் பெரியதொரு மடாதிபதியாக வருவேன் என்று எவருமே எண்ணிப் பார்த்ததுகூட இல்லை. புரோகிதத் தொழில் செய்து வாழ்க்கையின் புகைச்சலை ஒருவாறு ஓட்டி வந்த என் தந்தைக்கு மூத்தவனக நானும், இளையவனக தம்பி திருநாவுக்கரசும் இருந்து எப்படியோ பொழுதைக் கழித்துவந்தோம். வைதிக ஆசாரத்தில பற்றுமிகுந்த என் தந்தை எனக்கு வேதம ஓதவும் வேள்வி வளர்க்கவும் கற்றுக்கொடுத்தார். அடிக்கடி என்னைக் கூப்பிட்டு "அம்பி, சதாசிவ! ஆண்டவனை என்றும் மறவாதே! எங்கும் நிறைந்திருக்கும் அந்த ஏகப் பரம்பொருளை என்றும் தியானித்து வா!"-என்று என்னென்னவோ சொல்லுவார். அவர் சொல்லும் அத்தனையையும் மனதில் வைத்து நானும் நடந்துவந்தேன். அதனல எனக்கு ஊரிலேயே நல்ல மதிபபு! "சதாசிவத்தைப்போல ஒரு பிள்ளை இருந்தால் இருக்கவேண்டும். இல்லையேல் பிள்ளைகளைப் பெற்று என்ன பயன்? - என்று என்னைப் பார்த்துப் பெருமூச்சுவிட்ட பெரியவர்கள் எத்தனையோ பேர் எங்கள் ஊரில் உண்டு!

இப்படி நான் இருந்துவந்த நேரத்தில்தான் எங்கள் ஊருக்கு திருப்புவனத்திலிருந்து பெரிய மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க சுவாமிகள் எனபவர் புண்ணிய யாத்திரைக்காகப் புறபபட்டு வந்திருந்தார். வரும் வழியில் ஊராரின வேண்டுகோளுக்கிணங்கி எங்கள் ஊருக்கும் "வருகை அருளி' யிருந்தார். ஊர் மக்கள் மகிழ்ந்து அவரை உபசரித்தனர்.

பெரிய மடாதிபதிக்குத் தன்னுடைய புண்ணிய யாத்திரையுடன மற்ருெரு பெரிய இலட்சியமும உண்டு! அதுதான், தனக்குப்பின தன்னுடைய தானத்தில், மடத்தைப பரிபாலித்து, மதத்திற்குச சேவை செய்து, சொத்துக்களை நிர்வகிக்கத் தகுந்ததோர் வாரிசு தேவை என்பதாகும். எனவே அவர் செல்லுமிடங்களிலெல்லாம் சிறந்ததோர் ஆசாரசீலனைத் தேடியும் வந்தார். வழக்கமபோலவே எங்கள் ஊரிலும், வைதிகம் மிகுந்த மாணவர்களையெல்லாம் வரவழைத்து, சமஸ்கிருதத்திலும் சாத்திரத்திலும் பல கேள்விகளைக் கேட்டுப் பரீட்சித்துப் பார்த்தார். அதிருட்ட வசமாக எல்லா மாணவர்களும் தோற்று, நானே சமர்த்தனகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பெரிய மடாதிபதி [illegible] பார்த்து "ஆண்டவன் [illegible]கிருன்" என்று கேட்டார். [illegible] நான "எங்கும் நிறைந்திருக்[illegible]ந்த ஏகப் பரம்பொருளுக்கு [illegible] இடமென்று இருக்கிறது?" [illegible]பளிச்சென்று சொன்னேன்.

[illegible]என்னைத் தட்டிக் கொடுத்துக் [illegible]ப் பிடித்து "நான் தேடித் [illegible]ந்த இலட்சிய மாணவன் நீதான். [illegible]ன் எனக்கு வாரிசாக வருவதற்த [illegible]தகுதையுடையவன். நீ வாரிசாக வருவதில் நான் பெருமை அடைகிறேன்" என்று பூரித்தார். என் தந்தையிடம், மடத்தின் பெருமையையும் எதிர்காலத்தில் என் சேவையையும் எடுத்துக் கூறி என்னை அவருடன் அனுப்ப அனுமதி கேட்டார். ஏழைப் புரோகிதரான என் தந்தையும் ஒருவாறு இதற்கு இணங்கவே, நானே அடுத்த வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

முதலில் என் தாய் என்னை அனுப்ப மறுத்தாலும், மடாதிபதியைத் தெய்வமாக மதித்து வந்ததால், அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கியும், அடுத்த மடாதிபதியாக நான் வரப்போவதை எண்ணிப் பெருமைப்பட்டும், ஒருவாறு சம்மதியாமல் சம்மதித்தாள்!

ஆனல் எனக்கோ பெரிய மடா[illegible] பதியுட[illegible] யாத்தி[illegible]ரை போவதை[illegible] [illegible] தெரியாது.

எ[illegible] என்[illegible] மல் பிர[illegible] யைத் [illegible] காலம் நகராமல நகாந[illegible]

பிரிவு! அப்பப்பா! நினை[illegible] முடியாத பிரிவு! மீண்டும் நெருங்க முடியாத பிரிவு! நேற்றுவரை பெற்றெடுத்த தாய், தந்தை, தம்பி, உற்ருர் உறவினர் மற்றும் ஊரிலுள்ள சுற்றத்தார் என்றிருந்த பந்தம் இன்று பிரிக்கப்பட்டுவிட்டது. பாசக் கயிற்றை இப்படி இடையிலேயே அறுத்து அதன்மூலம் கிடைக்கும் இன்பத்தை அனுபவித்து இருந்தென்ன? இறந்தென்ன?...இப்படி ஒரு துன்பம் ஏற்பட்டு என்னை ஏன் வதைக்க வேண்டும்? என்னென்னவோ எண்ணினேன்!

கடைசிநாள்! என்னைப் பெற்று வார்த்து ஆளாக்கிய பேசுந் தெய்வத்திடமிருந்து பிரியவேண்டிய நாள்! எப்படியோ மடாதிபதியோடு ஊரை விட்டுப் புறப்பட்டுவிட்டேன்.

நாங்கள் சென்றவிடமெல்லாம் சிறந்த வரவேற்பும் உபசரிப்பும் எங்களை மகிழ்வித்தன. நான் என் பெற்ருேர்களைவிட்டுப் பிரிந்த நினைவு என்னை வாட்டாமல் இருப்பதற்காக பெரிய மடாதிபதி எனக்கு முன்னேற்பாடாக வேண்டிய கல்விக்கு ஏற்பாடு செய்திருந்தார். நானும் மடாதிபதியின் பூரண அன்பிற்குப் பாத்திரனுகி விரைவில் அவர் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டேன்.

ஒருவிதமாக எங்கள் புண்ணிய யாத்திரை முடிந்து சொந்த மடத்திற்குத் திரும்பிவிட்டோம்.

இரவு பகலாக எந்த நேரத்திலும் எனக்கு இறைவன், கல்வி, குரு, இவற்றைத் தவிர வேறு எந்த எண்ணமும் ஏற்படாதபடி வசதிகள் செய்து தரப்பட்டன. இருந்தாலும் இவ்வளவு நாட்களாக என் இதயத்தில் ஆழ்ந்திருந்த ஓர் எண்ணம் இப்போது மேலோங்கி நின்றது. தனிமை என்னைக் கொடுமை செய்தது. எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் என் இதயத்தின் ஒரு பாகத்தில் மட்டும் சூன்யமாக இருந்தான். ஏனெனில் நான் என்னை அறிந்துகொண்டேன். நான் யார் என்பதை நன்ருகத் தெரிந்துகொண்டேன்.

இடையே ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தன.

என் கல்வியும் முடிந்து நானே அடுத்த மடாதிபதியாக நியமனம் செய்யும் இளவரசுப் பட்டாபிசேகம் மு[illegible] நான் மடாதிபதியெனப் [illegible] சூட்டியபின் என தலையில் [illegible]ப்படும் பெரும் பதவியையும் [illegible]ப்பையும் பற்றி நன்ருக அறிந்[illegible]தேன். என் உள்ளக்கடலில் ஏற்[illegible]ல் இன்னும் ஓயவில்லை. [illegible]லைகள் ஒன்றுக்கொன்று [illegible] சிதற அடித்துக் [illegible]ன.

ஆனல் நான் இதுவரை இறைவனைபபற்றியும் மதத்தைப்பற்றியுமே கவனத்தை செலுத்தி வந்திருந்தால், அதைக் குறித்துச் சிந்திக்க நேரமில்லை.

முடிவாக அந்தப் பந்தத்தில் என்னைத் தள்ளுவதற்கு முன்பு, அதிலிருந்து விடுதலை பெற்றுப் போக முடிவு செய்து நான் குருநாதரை நோக்கிச் சென்றேன்.

பக்தியின் ரேகைகள் முகத்தில் நெளிய சாந்தசொருபியாகி 'இறைவ"னைத் தியானித்து வந்த அவரின் முகத்தில் என்னைக் கண்டதும் புன்னகை பூத்து, பூரிப்புப் பொங்கியது. அதன் விளைவு: என் தைரியமும் தேய ஆரம்பித்தது.

இருந்தாலும் என்னை விட்டுப் பிரிந்து செல்லும் அந்த தைரியத்தை இழுத்துப் பிடித்து நிறுத்தினேன். அவரை வணங்கி "குருநாதா! உள்ளத்தில் எழுந்திருக்கும் உணர்ச்சிகளுக்கு என் மனம் இப்போது அடிமையாய்விட்டது. கருணைகூர்ந்து என்னை இந்த பந்தத்திலிருந்து விடுவியுங்கள்"...என்று தடுமாறிச் சொல்லி முடித்தேன்.

சற்றும் எதிர்பாராத என் வேண்டுகோள் அவரைத் தாக்கி திகைப்படையச் செய்ததுபோலும்! தனக்குப் பின் தகுந்த வாரிசைத் தேர்ந்தெடுத்து அந்தப் பெருமையில் பூரித்து நின்ற அவர், மடத்தின் எதிர்காலம்பற்றியும் மதத்தின் வளர்ச்சிபற்றியும் பெரியதொரு மனக்கோட்டையையே கட்டியிருந்தார். அதன் காரணகர்த்தாவான நானே இப்படிச் சொல்வேன என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை!

"அருமைச் [illegible] முதல் இந்த [illegible] மடாதிபதியாக வ[illegible] வாயிலிருந்தா இந்[illegible] வருகின்றன? மண்[illegible] ணுசை. பொன்னு[illegible] மூவாசைகளையும் துறந்[illegible] யாகிய உனக்கு, இது[illegible] சோதனை. தர்மத்தைக் க[illegible] உண்மையை உன் ச[illegible] மக்களுக்கு எடுத்துச் [illegible] பணி மிக மிக உயர்ந்தது. வாழ்வின் ஒரே இலட்சியமும் [illegible] தான்! நீர்மேல் குமிழி போன்ற[illegible] இல்வாழ்க்கை. அதன் சுகம் நிலை[illegible] காது! தர்மத்திற்குப பெருமை தேட[illegible] வும் மனிதனுக்குத் தொண்டு செய்ய[illegible] வும் உனக்கு இன்றியமையா[illegible] அவசியம்-துறவறம்! அதில்தா[illegible] உன் தியாகம் சுடர்விட்டுப்பிரகாசிக்கும் உள்ளக்கடலில் எழும் எண்ண அலைகள் மனம் என்னும கரையை உடைத்து விடாமல் இயற்கை அன்னையின் தியானத்தில் ஈடுபடுதல் வேண்டும். அங்கேதான் உனக்கு சாந்தி கிட்டும். அதன் முதற்படிதான் நீ ஏற்றுக்கொள்ளப்போகும் இந்தப் புதுப்பதவி. கடமையைச் செய்வதில் பின்வாங்காதே!" - என்று அவர் பெரியதொரு பிரசங்கமே செய்துவிட்டார். நானும் திரும்பிவிட்டேன்!

இப்பொழுது நான் வெறும் சதாசிவம் அல்ல! "ஸ்ரீலஸ்ரீ சதாசிவத் தம்பிரான் அவர்கள்'! ஆமாம்! இப்படித்தான் என்னை எல்லோரும் அழைத்தனர்.

நான் மடாதிபதியென மகுடம் சூட்டிய இரண்டு ஆண்டுகளுக்குப் பின், நானும புண்ணிய யாத்திரைக்காகப் புறப்பட்டேன். காசி, கபிலவாஸ்து, கேதாரநாத், ரிசிகேசம் இப்படிப் பல சேத்திரங்கள் வட இந்தியாவில் சுற்றிவிட்டு இப்போதுதான் தென்னுட்டை அடைந்திருந்தேன்.

ஒரு சிலநாள் கழிந்தபின் நான் கிராமத்திற்கு எழுந்தருளி, நேற்றைய தினம் பவனிக்குப் புறப்பட்டேன். வழக்கம்போல், பொன்னுடை போர்த்துப் புனுகுசந்தனம்பூசி, மின்னுகின்ற பல்லக்கில் அமர்ந்து, முன்னும் பின்னும் பரிவாரங்கள் பாயிரம் பாடிபுடைசூழ பவனி வரும்போது, ஒவ்வொரு வீட்டாரும் ஆலத்தி சுற்றி என்னிடம் ஆசிபெற்றுத் தங்கள் காணிக்கையை செலுத்திச் சென்றனர்.

பல்லக்கு கிராமத்தின் தென் கோடியை அடைந்தபோது, அந்தக் கோடி வீட்டின் வாசற்படியில் கையில் கோல் ஊன்றியபடி ஒரு வயதான உருவம் தள்ளாடித் தளளாடி நின்றுகொண்டிருந்தது. ஏழ்மை அந்தக் குடிசையை அரசாட்சி புரிந்தது. நான் ஒருகணம் அந்தக் குடிசையைப் பார்த்தேன். அதற்குள பல்லக்கு வடக்குப் பக்கமாகத் திரும்பிவிட்டது. நான் ஏமாற்றப்பட்டேன்!

அன்று இரவு என் தங்கக்காப்பு ஒன்று காணமற் போய்விட்டது.

அதனல் நான் மிகுந்த துயரப்பட்டேன். இதை அறிந்த கிராம மக்கள் அந்த இரவைப் பகலாக்கித் துயரப்பட்டனர். தங்களது கிராமத்தில் இப்படி நடந்துவிட்டதே என்று அஞ்சினர். அவமானப்பட்டனர்!

அது சாதாரணக் காப்புதான்! இருந்தாலும் எனக்கு ஏதோ பெரிய நட்டமேற்பட்டதுபோல்தான் தோன்றியது!

— 10-ம் பக்கம் —

நடந்த விசயத்தைக் கேளுங்களேன் !' என்றான் அவன்.

தாயும் மகளும் பேசாதிருந்தனர்.

"கேளுங்கம்மா, அந்தக் கமலம் இருக்காளே, அவளுக்கு என்னைப் பார்த்தா எப்போதும் கேலிதான். அவ மட்டுமில்லே, அவ கூட இருக்காங் களேருக்கு, வள்ளி, கோகிலம், விசயா எல்லோரும் அப்படித்தான். அவங்க எல்லோரும் கூடிக்கொண்டு 'நீ ஆண் பிள்ளை தானா ?' என்று கேட்டாங்க 'ஆண்பிள்ளை இல்லேன்னு, நான் சேலையா கட்டிக் கொண்டிருக்கிறேன் ?' என்று கேட்டேன். வேட்டி கட்டிட்டா ஆண்பிள்ளையாயிடுவியா ? தைரியம் வேணும், தைரியம்!' என்றாங்க. 'என்ன செய்யணும் சொல்லு. உன் கையை முறிக்கவா ? காலை ஒடிக்கவா ?' என்று கேட்டேன். 'உனக்குத்தான் கையில்லே —அதுக்கு எங்க கையையும் முறிக்க வேணுமா ?' என்று கேட்டா அம்மா. அப்புறம் அவள் என்கிட்டே வந்து, 'அ... ந்த ! நீ ஆண்பிள்ளை தானே? ஒரு காரியம் செய்கிறாயா ?' என்று கேட் டாள். எனக்கு ரோசம் வந்துவிட்டது. அழுகையை நிறுத்திவிட்டு, 'என்ன செய்ய வேணும் ? சொல் !' என்றேன்.

'அதோ, அங்கே ஒரு தோட்டம் இருக்கிறது. அதில் ஒரு மல்லிகைப் பந்தல் இருக்கிறது. அதிலே போய் ...ங்களுக்கெல்லாம் அரும்பு பறித்துக் ...ண்டு வருகிறாயா ?' என்று கேட் ...ள்.

'பூ ! இவ்வளவு தானா ?' என்று கேட்டுவிட்டுக் கிளம்பினேன்.

'இதோ பார், அந்த மல்லிகைப் பந்தல் பக்கத்திலே ஓர் இராட்சசி காவல் இருக்கிறாள். அவ பார்த்தா உன்னைப்பிடித்து, மல்லிகை பறித்த கையை அப்படியே கடித்துத் தின்று விடுவாள்!' என்று சொன்னாள் கமலம்.

இராட்சசியாவது, பிடிக்கிறதாவது ? கடிக்கிறதாவது ? என்று சொல்லிக் கொண்டே சுவர் ஏறிக்குதித்து இந்தத் தோட்டத்துக்குள்ளே வந்தேன். மல் லிகை அரும்பு பறித்துக் கொண்டிருந் தேன் ! இருந்தாலும் எனக்கு மனசுக் குள்ளே ஒரு பயம். எங்கிருந்தாவது இராட்சசி வந்துவிடுவாளோ என்று நெஞ்சு படக் படக் என்று அடித்துக் கொண்டது. அப்போது திடீரென்று யாரோ அதட்டுகிற குரல் கேட்டது. அவ்வளவுதான் 'டபார்' என்று பாய்ந்து சுவரின் மேல் ஏறினேன். இந்த ஒரு கையிலே விரல் இல்லாதத னாலே, அவசரத்திலே நழுவி விழுந்து விட்டேன். அப்புறம் தலை கிர்ரென்று சுற்றுவது போல் இருந்தது. நல்ல வேளை ! நீங்கள் வந்து என்னைக் காப்பாற்றிவிட்டீங்க. இல்லேன்னா அந்த இராட்சசி என்னைக் கடிச்சே தின்றுவிட்டிருப்பாள். இல்லையா ?" என்று கேட்டான் அந்த இளைஞன்.

"ஏற்கனவே பித்துக்குளி ! அத்தோடு முட நம்பிக்கையை வேறு ஏற்றிவிட்டார்கள் அந்தச் சுட்டிகள் !" —இப்படி நினைத்து வருத்தப்பட்டாள் மரகத அம்மா.

"இவ்வளவு அழகான உருவத்திற் குள் எவ்வளவு பைத்தியக்காரத்தன ...ன மூளை !" என்று எண்ணி அவனுக் ... அனுதாபப்பட்டாள் தங்கம்.

...லகம் விசித்திரமானது. பிறர் ...தாபங் காட்ட வேண்டிய கீழான ...லே சிலர் இருப்பார்கள். ஆனால் ... வேறு சிலரைப் பார்த்து ...டுவார்கள். தங்கம் அழகிருந் ...அறிவிருந்தும் பண்பிருந்தும் குணமிருந்தும் பணமில்லாத குறை யால் நாடுவார் இல்லாத பெண்ணாக இருந்தாள். அவள் அழகிருந்து அறி வில்லாத இந்த இளைஞனை நோக்கி இரக்கப்பட்டாள்.

வீட்டு முன் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டுத் தங்கமும் மரகத அம்மாவும் திரும்பிப் பார்த்தார்கள். கந்தசாமி வாத்தியாரும் முருகேச வாத்தியாரும் வருவதைக் கண்டு அவர்கள் எழுந்து ஒதுங்கி நின்றார்கள்.

படுக்கையில் கிடந்த அந்த வாலி பனைப் பார்த்தவுடன் முருகேச வாத்தி யார், கோபத்துடன், "ஏண்டா, நீ எங்கே வந்தாய் ? கலியாணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந் தாய் ?" என்று சீறினார்.

கந்தசாமி வாத்தியாரோ அவர் தோளைப்பிடித்து அமர்த்தி அவன் தலை யில் கட்டுப் போட்டிருப்பதைச் சுட்டிக் காண்பித்துத் தம் நண்பரைச் சினம் தவிர்க்கும்படி வேண்டிக்கொண்டிருந் தார்.

முருகேச வாத்தியாருடைய வார்த்தைகளைக் கேட்ட தங்கத்துக்குத் தலை சுற்றிக்கொண்டு வந்தது. அடிபட்டுக் கிடந்த, ஒரு கையில்லாத. அந்தப் பித்துக்குளி இளைஞன்தான் தன்னை மணக்கப் போகிற மாப்பிள்ளை என்பதை யறிந்தபோது, தன் தந்தை முதல் நாள் இரவு இந்த விசயத்தைத் தான் வாய்விட்டுச் சொல்லமுடியாமல் திண்டாடினார் என்பதை நினைத்துப் பார்த்தபோது, அவளுக்கு என்ன வென்று சொல்லமுடியாத-ஒரு-மாதிரி யாக வந்தது. தலையை ஒரு கையால் பற்றித் தாங்கிக்கொண்டே, அடுக்களை அறைக்குள் ஓடித் தரையில் குப்புற விழுந்துகொண்டு விசித்து விசித்து அழலானாள்.

3. அண்ணாமலைப் பண்டிதர்- ஆத்திகரிடை ஒரு நாத்திகர்!

நினைத்துப் பார்த்தால் வாழ்க்கை விசித்திரமாகத்தான் தோன்றும். பெரும்பாலான சந்தர்ப்பங்களிலே நாம் பார்த்திருக்கிறோம்-நமக்கு முன்பின் அறிமுகமில்லாதவர்கள் யாராவது திடீரென்று நம்மைச் சந்திக்கிறார்கள். பிறகு அவர்கள், ஏழேழு தலைமுறைக்கு முன்னாலிருந்தே நம்மோடு ஐக்கியமாக இருந்து வந்திருக்க வேண்டிய உற வினர்களாக இருப்பதை அறிந்து கொள்ளும்படி நேரிடுகிறது. எங்கோ, எப்போதோ, எதற்காகவோ, நம் முதாதையர் காலத்திலே விட்டுப் போன உறவு நம் காலத்திலே ஒட்டிக் கொள்ள ஆரம்பித்து விடுகிறது. சில சமயங்களில் அவர்கள் நம் உறவினர்களாக இல்லாமலும் இருக்க லாம். ஆனால் ஏற்படுகின்ற நட்பு, பிரிக்கமுடியாத வகையில் ஒட்டிக் கொண்டு விடுகிறது. இந்த இரண்டா வது வகையைச் சேர்ந்த உறவுதான் அண்ணாமலைப் பண்டிதருக்கும் கந்த சாமி வாத்தியாருக்கும் ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும்.

அண்ணாமலைப் பண்டிதர் நெய்யூ ரைச் சேர்ந்தவரல்ல; நெய்யூருக்கு இதற்குமுன் வந்தவருமல்ல. ஆனால், அவர் நெய்யூருக்கு வந்த பிறகு, நெய்யூரிலே ஒரு கலகலப்பு ஏற்பட்டு விட்டது என்றுதான் சொல்ல வேண் டும். அவர் வந்த பிறகு நெய்யூரிலே 'கட்சி' தோன்ற ஆரம்பித்து விட்டது என்றுகூடச் சொல்ல லாம். ஓய்வு நேரத்திலே நாலு பேர் கூடினால்,— அவர்கள் ஆண்களாக இருந்தாலும் சரி, பெண் களாக இருந்தாலும் சரி, அண்ணாமலைப் பண்டிதரைப் பற்றிப் பேசாமல் இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட பெரிய மனிதராகிவிட்ட அண்ணாமலைப் பண் டிதர், ஒரு சிலரின் விருப்புக்கும் வேறு சிலரின் வெறுப்புக்கும் ஆளாகியிருந்த அந்த அண்ணாமலைப் பண்டிதர், முரு கேச வாத்தியாருக்கு நெருங்கிய நண்ப ராகிவிட்டார். இதனால், அண்ணாமலைப் பண்டிதரைப் பற்றிப் பேச்சு வளர் கின்ற இடங்களில் முருகேச வாத்தியா ரின் பெயரும் ஓரிரு முறை அடிபடத் தான் செய்தது. அண்ணாமலைப் பண் டிதர் அந்த வட்டாரத்திலேயே ஒரு பெரிய வித்வான் என்று பெயர் பெற்ற வர். தண்டமிழின் கரைகண்ட பண் டிதர் என்று கற்றறிந்தவர்கள் பலர் அவரைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

அண்ணாமலைப் பண்டிதர் நெய்யூர் அருகிலே யிருந்த கதலிப்பட்டணத் திலே யிருந்து வந்தார். வயது சுமார் ஐம்பது அல்லது ஒன்... இருக்கலாம். அவர் ... உட்கார்ந்து நூலாராய்... புது நூல்கள் எழுதுவது... கொண்டிருந்தார். இ... வெளியூர்களுக்குச் செ... செய்யப்போவதும் உண்...

நெய்யூர் தொடக்கப்ப... விழாவிலே சொற்பொழி... அண்ணாமலைப் பண்டித... வேண்டுமென்று ஆசிரிய... விரும்பினார்கள். அவர்களுடை... பத்தைப் பூர்த்தி செய்வத... தலைமையாசிரியரும் அதற்கு வே... ஏற்பாடுகளைச் செய்தார்.

பள்ளி ஆண்டு விழாவின் பே... பிள்ளைகள் விளையாட்டுப் போட்டி... லாம் முடிந்த பிறகு, மாலை ஆறு ம... யைப் போல் பரிசு வழங்குதலு... சொற்பொழிவும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாதாரணமாக அந்த ஊர் மக்கள் விளையாட்டுப் போட்டி பார்த்து முடிந்த தும் அவரவர் வீடுகளுக்குத் திரும்பி விடுவார்கள். ஆனால், அண்ணாமலைப் பண்டிதரின் பெயர் எங்கும் தெரிந்து பரவியிருந்தபடியால், அவர் பேச்சைக் கேட்பதற்கு என்று எல்லோரும் தங்கி யிருந்தார்கள். அண்ணாமலைப் பண் டிதர் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து சேர்ந்து தமது சொற்பொழிவைத் தொடங்கினார். அவர் பேச்சு முழுவதும் அந்த ஊர் மக்களுக்குப் புதிதாயிருந் தது. அவர்கள் இதுவரை மனதில் நினைத்துக்கூடப் பார்க்காத பல கருத் துக்களை அண்ணாமலைப் பண்டிதர் பேசினார்.

அண்ணாமலைப் பண்டிதரின் பேச்சு சிலருக்குச் சிந்தனையைக் கிளறிவிடுவ தாயிருந்தது; சிலருக்கு ஆத்திரத்தை மூட்டிவிடுவதாயிருந்தது அவர் கூறிய கருத்துக்கள் சிலருக்குக் குளிர் தென்ற லாக வீசி, இன்பம் தருவனவாக இருந் தன; சிலருக்கு அனற் காற்றாக அடித்து வேதனைத் துடிப்பில் ஆழ்த்து வனவாக இருந்தன.

அண்ணாமலைப் பண்டிதர் தமிழ் மொழியின் பெருமையைப் பற்றிப் பேசி னார் ; தமிழ் அரசர்களின் பண்பு, வீரம் ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். இத் தோடு நின்றிருந்தால், கேட்டவர்கள் கேட்டுவிட்டு அவரவர் வீட்டுக்குப் போய்ப் பேசாமல் தூங்கியிருப்பார்கள். ஆனால், அவர் தமிழனின் இன்றைய நிலையை அவ்வப்போது முந்திய நிலை யோடு ஒப்பிட்டுக் காட்டிக் கொண் டிருந்தார். "ஆண்டவனை அருச்சிக்கும் போது தாய்மொழியில் போற்றி அருச் சிக்காவிட்டால் உள்ளம் இறைவனோடு எவ்வாறு இயையும்?" என்று கேட்டார். இன்னும், ஆடு வெட்டுதல், கோழி யறுத்தல் முதலிய பலியிடும் வழக் கங்கள் அருத்தமற்றவை யென்று கூறினார். அத்தோடு நில்லாமல், சாத் திரம் பேசுதல், சகுனம் பார்த்தல், சோதிடம் கேட்டல், சாதகம் பார்த்தல் முதலிய மூட நம்பிக்கைகளை யெல்லாம் களைந்தால்தான் நல்லறிவு பிறக்கும் என்று கூறினார். ஆண்டவன் மீது நம்பிக்கை யில்லாதவர்கள்தான் கோளி லும் குறியிலும் நம்பிக்கை கொண்டு அலைவார்கள் என்று சொன்னார். ஆண் டவன் படைப்பில் எல்லோரும் சமமே என்று சொன்னார். இப்படி அவர் தெய் வீகத்தையும் விட்டுக்கொடுக்காமல் மூடத்தனத்தையும் விட்டுவைக்காமல் பேசினார். அவர் போக்கே, தனி ஒரு வழி !

(தொடரும்)

உரையாடல்

...திரன் ! உன்னுடைய மன...ய விசித்திரமாக இருக்கிறது. ...ரதிரி சின்னச் சேதிக்கெல்லாம் ...பட்டால், உள்ளம் சோர்ந்து ...ா ? பல இடையூறுகளைச் ...ளிக்கத் திராணி இல்லாவிட்டால், ...காழைத்தனம் ஆளையே கொன்று விடும். ஒருவன் ஒரு காரணத்திற்கு உன்மீது குறை கூறிவிட்டான் என்பதற்காக, அதையே நீ ஏன் முடிவாக எடுத்துக்கொள்ள வேண்டும் ? உன்னைப்பற்றி முடிவு கட்ட மற்றவர்களுக்கு உரிமை தா. உன் மனச்சான்றைப் பயன்படுத்தாதே ! உன்னுடைய குற்றத்தையும் குறையையும், வெற்றியையும் பெருமையையும் நிர்ணயிக்கக்கூடிய சக்தியை, உன்னுள் நீயே வைத்துக்கொள் ! பிறருடைய புகழ்ச்சியில் மயங்கியும், இகழ்ச்சியில் வருந்தியும் இருப்பதனுல் என்றுமே வாழ்க்கையில் சஞ்சலமும் புயலும் அடங்காது ! விட்டுவிடு !''

''உண்மைதான் செல்வம் ! நீ உயர்ந்த நிலையிலிருந்து என்னைப் பார்க்கிருய். உனக்கு உலகம் சமமட்டத்தில் தெரிகிறது. எனக்கு மிகவும் உயரமாகத் தெரிகிறது ! நான் தவறே செய்யவில்லை செல்வம் ! வாழ்க்கையில் எந்த உள் துன்பத்தையும் அடக்கிக்கொள்ளலாம் ! என்ருவது ஒரு நாளில் ஒரேயடியாக வெடித்து விடும். என்னுல் வெளியே உறுத்தும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை ! எப்பொழுது அடிபடுமோ, எப்போது வலி தீருமமா, என்று எப்பொழுதும் மிரட்சியான பாதையிலே செல்ல வேண்டியிருக்கிறது.''

''பிறருடைய அடிகளை நீ ஏன் தாங்கிக்கொள்ள வேண்டும் ? நீதான் தவறே செய்யவில்லையே ! பின் ஏன் வருந்துகிருய் ? நம் மனச்சான்றுக்கு நாம் நல்லவனுக இருந்தால் சரி ! இதுதான் என்னுடைய கொள்கை !''

''தவறு செய்யாமலே தண்டனை அனுபவிக்க நேருவது நெஞ்ச நிறைவுக்குப் புறம்பானதல்ல ! பெரியவன் தவறு செய்தால் அதைக் கண்டு கொள்ளாததுபோலப் போவார்கள். சிறியவர்கள் தவறு செய்யாவிட்டாலும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளை வைத்து அவர்களையே அந்தத் தவறுகளுடன் பின்னப் பார்ப்பார்கள். ஒரு வாளித் தண்ணீர் தவறிக் கொட்டிக் கிடப்பதைப் பெரிதுபடுத்தமாட்டார்கள். கையளவு எண்ணை தவறிச் சிந்திலும் எளிதாக விடமாட்டார்கள். பொருளுக்குத்தான் மதிப்பு ! குற்றத்திற்குத் தகுதியில்லை ! சிறிய குற்றம், பெரிய குற்றம் எல்லாம் பொருள் வசதியைப் பொறுத்தனவெ !''

''உம் ! நீ பொருள் வசதி இல்லாதவனுக இருப்பதால், எல்லோரும் உன்னைக் குற்றம் கூறுகிருர்கள் என்று நினைப்பது தவறு ! இது உன்னைப் போன்றவர்களின் கற்பனைகளில் மட்டுமே எழுகின்ற குழப்பம் !''

''நீதான் கற்பனை உலகத்தில் இருக்கிருய் !''

''இந்த உலகம் நம்மைப் புறக்கணிக்கும்போது நமக்குப் புகலிடம் தருவது அதுதானே !''

''ஆனுல் எப்பொழுதுமே அங்கேயே இருக்கக்கூடாதல்லவா ? எது உண்மையில் உலகம் என்பதே தெரியாமல் போய்விடுமே !''

''தெரிந்துகொள்வதால் துன்பம்தான் விளையுமென்ருல் தெரிந்துகொள்ளாமல் இருப்பதில் தவறில்லையே ! நான் பணக்காரன்தான்...இலட்சாதிபதிதான். ஆனுல் என்ன ? நானும்தான் வேலை பார்த்துச் சம்பாதிக்கிறேன். அந்த இருநூறு ரூபாய் சம்பளத்தில்தானே நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.''

''எனக்குத் தெரியாதா ! ஆனுல் நான் சொல்வது அதையல்ல. இருக்கிற இடத்தில் இருந்தால் 'என்ன கருடா ! சௌக்கியமா ?' என்று பாம்பு கேட்குமா ? உன்மீது அபாண்டம் சுமத்தப் பயப்படுவார்கள். உன்பின், தந்தை உருவிலும், பொருள் உருவிலுமுள்ள சக்தி இருக்கிறது. 500 ரூபாய் காணேமென்ருல் 'சே ! இலட்சாதிபதி பிள்ளை திருடுவானு... ?' என்று தங்களுக்குள்ளேயே தீர்ப்பு வழங்கிக் கொண்டு வருவார்கள். அந்த நேரத்தில் நான் உன் பக்கத்தில் இருந்தால், 'இந்தத் தரித்திரம்தான் எடுத்திருக்கும் !' என்று சந்தேகப்படுவார்கள். நீ எடுத்திருந்தால்கூட 'நம்மை எவன் கேட்கிருன் ? பாப்போம் !' என்ற இறுமாப்பில் இருப்பாய் ! நம்மீது சந்தேகம் விழாமலிருக்க வேண்டுமே, என்று நான் கலங்குவேன் ! மனச்சான்று யாருக்குத் தேவை ? செல்வம் ! உம்...! பேசி என்ன பயன் ? ''நாம் உண்மையைத்தான் சொல்கிருேம் !'' என்று சொல்லக்கூடிய நிலையிலுள்ளவனெல்லாம் கவலையுள்ளவன்தான் ! ''நாம் சொல்வதுதான் எடுபடும் !'' என்ற நிலையிலுள்ளவன் ஏன் கவலைப்படப் போகிருன் ? உலகத்தில் யாரும் வாழ்வதற்காகவே பிறப்பதில்லை. அவர்கள் வாழ்வதோ, வாழாமலிருப்பதோ, யாராலும் நிர்ணயிக்க முடியாத இயற்கையின் கையில் இருக்கிறது !''

''வாழ்க்கையில் வெறுப்பு, உனக்குத் தத்துவம் போதிக்கிறது.''

''விருப்பத்தின் நிறை உனக்குத் தைரியத்தைத் தருகிறது !''

''விருப்பமிருந்தால்தானே வெற்றி தோல்வி தெரியும் !''

''கசப்புத் தீர்ந்தால்தானே விருப்பு ஏற்படும் !''

''இன்ப உலகம் எல்லோருக்கும் பொதுதானே !'

''அதைச் சிலர் மறுக்கிருர்களே ! இல்லாவிட்டால் துன்பம் ஏன் பிறந்தது !'

''துன்பமில்லாவிட்டால் இன்பம் இல்லைபோலும் !''

''ஆமாம் ! ஒருவருடைய இன்பத்திற்காகப் பலர் துன்பமடையத்தான் வேண்டும் ! இதில் சந்தேகம் என்ன ?''

''அதிக அறிவும், ஆழ்ந்த அனுபவமும் எடுத்துச் சொல்லும் உண்மைகள், ஏற்றுக்கொள்ளப் பயன்படும்படி செய்கின்றன ! பயங்கரமாக இருக்கின்றன ! நீ அந்தப் பயங்கரத்திலிலிருந்து மீண்டு இந்தப் பக்கம் வந்துவிடு ! இங்கே உனக்கு இன்பப்பாதை வகுத்துத் தர நானிருக்கிறேன் !''

''கசப்பில் இனிப்பைக் கண்டவனுக்கு, உண்மை இனிப்பு கசக்கும் ! எனக்கு எப்போதும் இதுபோன்ற சிக்கலிலும் குழப்பத்திலும் ஆபத்திலும் மாட்டிக்கொண்டு சித்ரவதை படுவதென்ருல் ஒரு தனி ஆனந்தம் ஏற்படுகிறது ! என்னை விட்டுவிடு !''

''அப்படியானுல் உன்மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த அபாண்டத்துக்கு மறுப்பு தெரிவிக்கப்போவதில்லையா ? விடுபட முயற்சி செய்யப்போவதில்லையா ?''

''இல்லை ! இல்லை ! இல்லை !...ஆம் ! ஒப்புக்கொள்ளத்தான் போகிறேன். நான்கு வருட உண்மை உழைப்பிற்குப் பிறகும், ஏராளமான அவமதிப்புகளையும், அடிகளையும் தாங்கிக்கொண்டு, ஊதியத்துக்காக ஊழியம் பார்த்த என்னைக் கடைசியில் நாணயத்துக்கு நம்பிக்கையில்லாதவன் என்று எப்பொழுது சொல்லிவிட்டார்களோ, அதற்கப்புறமும், மனத்தளர்ச்சி அடையாமலிருக்கமுடியுமா ? முதல்நாள் இரவு ஏழரை மணிக்குப் பூட்டப்பட்ட கடை மறுநாள் காலை எட்டரை மணிக்குத் திறக்கப்பட்டது. முதல்நாள் இரவு எண்ணிவைக்கப்பட்ட இருப்பு மறுநாள் காலையில் ஐநூறு ரூபாயை இழந்துவிட்டது ! எப்படி என்று யாருக்கும் தெரியவில்லை, ஆனுல் எல்லோருடைய சந்தேகமும் உடனே என்மீதுதானே விழுந்தது ? நான் திருடினுலும், திருடாவிட்டாலும் திருடக்கூடியவன் என்று பிறரால் எண்ணப்பட்டேன் ?-ஏன் ? பிரசவ வேதனையில் துடித்துக்கொண்டிருக்கிருள், என்... நம்பி வாழவந்தவள் !''

''என்ன ? என்ன ?...இதை...லாம் நீ என்னிடம் சொல்லவில்லை ?

''சொல்லியிருப்பேன் ! என் மீ... உண்மையான அன்புகொண்டவன் ஒருவன்தான் ! 'இவன் பணம் ...வதற்காக நம்மிடம் என்னவெல்ல... பேசுகிருன்' என்ற இழிவான எண்... என்மீது உனக்கு ஏற்படா... இருக்கவே, ஒதுங்கி இருந்...தேன் !''

''சீ ! சீ ! முட்டாள் நாயே !... உனக்குப் பைத்தியம்தான் பிடித்... விட்டது. உன்னுடைய முதலாளியிட... நான் பேசிக்கொள்கிறேன். என்... ஆனுலும் சரி ! நீ ஐநூறு ரூபா... எடுக்கவில்லை என்பதற்கு ஐயாயிரம் வேண்டுமானுலும் செலவழித்து நா... வாதாடுவேன் ! உன் மனைவி எந்... மருத்துவமனையில் இருக்கிருள்.''

''செல்வம்...நீ உண்மையில்...''

''நிறுத்து ! உன் தத்துவ ஆராய்ச்...களைச் சுடுகாட்டில் வைத்துக்கொள் நடக்க வேண்டியதைக் காலம் தவறு முன் நடத்த வேண்டும். உன் மனைவியை எப்பொழுது போய்ப் பார்த்தாய்...இந்தச் சேதிகளை ஏதாவ... சொன்னுயா ?''

''இல்லை !''

''சரி, வா ! போகலாம்... மனைவி மறுக்கமாட்டாள். அ... வேண்டிய ரொக்கம் இருக்க... எதுவும் பேசாதே !''

(சந்திரனின் கையைப் பிடி... இழுத்துக்கொண்டு செல்வம் செ... கிருன். அப்பொழுது ஐயா என்ற ஒரு... குரல் கேட்கிறது. திரும்பிப் ... கின்றனர்.)

''என்ன?...செல்வம்...! இவன்தான் என் மனைவியை அனுமதித்திருக்கும் ஆஸ்பத்திரிக் கம்பவுண்டர், என்னப்பா ! அடே...டே ஏன் அழுகிருய் மத்தியானத்திலிருந்து உன்னை தான் தேடி அலைகிறேன் !''

''ஆபீசெல்லாம் தேடி அலை... எப்படிங்க சொல்வேன் ! உ... அவுங்க...இந்தமாதிரி முடியு... நாங்க நினைக்கவே இல்லீங்க !''

''என்ன சொல்கிருய் !'

''இறந்துட்டாங்கங்க !''

''ஆ !...சகுந்தலா !...

இதோ நானும் வருகிறேன் !''

(ஓடுகிருன்)

''சந்திரன் ! நில்...நில் ...எங்... ஓடுகிருய் ?''

''சுடுகாட்டுக்குப் போகிறேன் தத்துவ ஆராய்ச்சி செய்ய !... ஆ...ஆ !''

வாழ்க ! வாழ்க !

தோழர் அலிசே... மன்சூர் அவர்களின் தங்கை தி...மதி **ஆ. மீ. முகைதீ...** ...பகம் அவ... அன்று திரு. ...ஸ். மீரா... ...ளை வாழ்க்கைத் து... ...டி நாகூர் அனிபா... ...சை வி...தும் நடைபெற்றது.

கோவை திரு. பழனியப்பன் அவர்களின் தங்கை திருமதி **செயலட்சுமி** அவர்கள் கடந்த 2-5-'60 காலை திரு. **கோபால்** அவர்களை, கோவையில் மணந்தார். திரளான தோழர்கள் வருகை தந்து வாழ்த்தினர்.

★

இரு மணமக்களையும் வாழ்த்துகிருேம் ! வாழ்க ! வாழ்க !

(ஆ-ர்.)

கருநாடகத்தின் வளங்க...

திராவிடநாட்டின் ஓர் அங்கமாக விளங்கும் கருநாடகத்தின் வளங்கள் பலவற்றைப் பார்த்தோம், கடந்த இரண்டு இதழ்களாக. இன்னும் பல வளங்கள் இருக்கின்றன கருநாடகத்தில்.

ஒரு நாட்டுக்கு எப்படி கட்டி முடித்த அணைக்கட்டுகள், உற்பத்தி பெருக்கும் தொழிற்சாலைகள், உணவுப்பொருள்களும் மற்ற விளை பொருள்களும் இன்றியமையாதனவோ, அப்படியே காட்டு வளமும் மிகத் தேவையான வளமாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் மொத்தக் காட்டுவளம் ஏறக்குறைய 2.18 இலட்சம் சதுர கற்கள் அளவாகும். அவற்றில் கருநாடக மாநிலத்தில் ஏறக்குறைய 13,553 சதுர கற்கள் அளவு காட்டு வளம் இருக்கின்றது. இந்தக் காட்டு வளத்தில், பெருமளவிற்குச் சந்தன மரங்கள் வருவாயைத் தருகின்றன. அதற்கு அடுத்த காகித உற்பத்திக்கு இன்றியமையாத மூங்கில் ஏராளமாக ...க்கின்றது. இவை மட்டுமல்லா... ...பலகை செய்வதற்கும் மரத்தால் ...ப்படும் பொருள்களான நாற்... மேசை, பஞ்சுமெத்தை, ... போன்றவைகட்டுக் தேவை... ...ர்தர மரங்களும் நிறைய ...ன. மேலும் கரி எரிப்... ...வேண்டிய மரங்களும், ...ய்யவேண்டிய பலகை... ...ளும், அடுப்பு எரிக்க ...ளும் அபரிதமாக

சோப்பு பேக்டரி வெளிநாட்டினின்று வரும் ஆர்டர்களுக்கு ஏற்பப் பெரிய அளவில் உற்பத்தி செய்யமுடியாமல் திணறுகிறது. காரணம் இத்தொழிலை விரிவாக்கத் திட்டம் தீட்டியும், அது நிறைவேற்றப்படாமையே.

காட்டு வளம் மட்டுமின்றி காட்டு விலங்குகளிலும், பறவைகளிலும கருநாடகம் வளம் பெற்றதாகவே இருக்கின்றது.

மிருகக் காட்சிசாலைகள் அமைத்து மக்கள் அதைக் கண்டு களிக்கச் செய்வதாலும், வன விலங்குகளின் தோல் முதலியவை பல விதமான பயன்கள் தருவதாலும், கஸ்தூரி கோரோசனம் போன்ற மணம் கமழும் மருத்துவப் பொருள்கள் கிடைப்பதாலும், பறவைகளின் இறகுகள் அழகுக்கும், வேறு உபயோகத்திற்கும் பயன்படுவதாலும், கொக்கு, புரு, காடை, கௌதாரி போன்ற பறவைகளும், மான், முயல் போன்ற விலங்குகளும் சுவையான உணவாக ஆவதாலும், காட்டு வன விலங்குகள் இருப்பது அவசியமாகிறது, ஒரு நாட்டின் மிக முக்கிய வளங்களில் ஒன்றாக.

சீரங்கப்பட்டினத்தில் பறவைகள் பாதுகாப்பு இடமும், இராம்நாத்புரத்தில் ...ன் பாதுகாப்பு இடமும், மை... காட்சிசாலையில் 'மீ... ...சிய பார்க்கும், மைசு... ...கல் ...லையில் பண்டி... சே... இருக்கின்றன. ...

துணியும் நெய்கின்றன கைத்தறி ஆலைகள்.

கைத்தொழில்களில் தந்தம், சந்தன ...ம் ஆகியவற்றில் அலங்காரத்து... ...டிய அழகிய பூ வேலை... ...தும் நல்ல முறையில் இ... ...கின்றது.

தோலி... ...கள்–பெல்ட், சூட்... ... செய்வது, கண்ணு... ...ளயல் செய்வது, மனோரம்மியமான வாசனைப் பொருள்களைத் தயாரிப்பது, உயர்வான மணம் வீசும் ஊதுவத்திகள் தயாரிப்பது ஆகிய கைத்தொழில்களும் இருக்கின்றன.

மக்கள் தொகை பெருகி வருவதாலும், தேவை அதிகரித்து வருவதாலும், அறிவியல் வளர்ந்து விஞ்ஞான உலகு தோன்றி வருவதாலும், இன்னமும் நம் நாட்டில் கைத்தறியும், கைத்தொழிலும் மட்டும் இருந்து வருவது விரும்பத்தக்கதல்ல. பெரிய பெரிய நூல் ஆலைகள் தோன்றவேண்டிய இடத்தில் கைத்தறி ஆலைகள் மட்டும் இயங்குவது பரிதாபத்திற்குரியது. ஆனல், என்ன செய்வது?

...நாடகத்தில் இன்னும் எத்தனை ...வளங்கள் இருக்கின்றன.

...மைசூர்ப் பகுதிகளில் ரப்பர் ...மரங்கள் நிறைய வளர்க்...ன. வெளிநாட்டுக்கு ...செய்யப்படும் ரப்பரின் ...டைக்கும் வருமானத்தில்

மூங்கில்களும் கருநாடகத்தின் ...களில் கிடைக்கின்றன. கிடைக்கும் மரங்களை நன்கு இயங்கக்கூடிய க... ஏதும இல்லை. இருக்கும் காகித ஆலை மிகச் சிறியது... ...டிற்கு அது 6,900 டன் மட்டுமே உற்பத்தி செய்கி... இன்னொரு காகித ஆலை துவங்... போவதாக இருந்தது. அது பற்றி இதுபோது ஏதும பேச்சு காணோம்.

கருநாடகத்தின் பெரும்பாலான வளங்களைப் பார்த்தோம்.

நாட்டிற்கு தேவையான எல்லா வளங்களையும் கருநாடகம் பெற்றிருக்கிறது. கனிச் செல்வம், காட்டுவளம், நில வளம், நீர் வளம், இயற்கை இன்னும் பல வளங்களையும் அபரிதமாகப் பெற்றிருக்கிறது. இருக்கும் தொழில்களை விரிவாக்கவும், புது... தொழில்களைத் துவங்கவும் நல்ல பல வாய்ப்புகள் இருக்கின்றன. ...னல் செய்யவில்லையே. இருக்கும் ...தொழில்களையே மூடச் செய்யாவிட்டால் அதுவே நமக்கு கிடைத்த உதவி எனலாம்.

பாலைவனப் பகுதியை சோலை வனமாக்க பல கோடிப் பணங்களை வாரியிறைக்கிறது வடநாட்டு அரசாங்கம்; வடக்கு வாழ! ஆனல் பாலை வனமாக இருக்கும் தென்னாட்டை சுந்தரபுரியாகக மறுக்கிறது மத்திய ஆட்சி. அதற்கு வல் பிடிக்கின்றன இங்குள்ள மாநில அரசுகள்.

...் எரித்த நிலவா? கட...ல கரைத்த பெருங்காயமா?

...ஸவுட்' எனப்படும் ...குரிய மரமும் கரு... ...களில் வளர்ந்திருக்... ...ாக. பெருப்பாலும் ...ிலும், குடகுமலைப் ... காட்டுவளம் மிகுதி ...றது.

...டுவளம் தரும் பொருள்களில் ... யாராலும் மறக்கமுடியாது. ...ன் அதரத்தினின்று தேன் ஒழுகு...தே'' என்று அரிவையரிடம் நாம் ...ன்புடன் கொஞ்சுவோமே அந்தத் ...தேன் அல்ல – உண்மையான அத்...தேனை, குடகுப் பகுதிதான் கருநாட...த்தில் மிகுதியாக அளிக்கிறது. மேலும் செருப்புத் தொழில்களுக்கு மிக மிகத் தேவையான தேன் மெழுகு கூட நிறைய கிடைக்கின்றது குடகினின்று.

'சேடின்வுட்' எனப்படும் மரமும் கருநாடகக் காட்டினின்று கிடைக்கின்றது. மரச்சாமான்களும், சட்டங்களுக்கும், அழகிய மர வேலைகளுக்கும் இம்மரத்தின் கட்டை பயன்படுகிறது.

'ரோசுவுட்' எனப்படும் அழகிய கருமையான மரமும் இருக்கின்றது, கருநாடகத்தில். இன்றைய மரவேலைகளுக்கு இன்றியமையாதது இது. இதே போன்றுதான் தேக்குமரமும்.

...சிலேயே உயர்தர சந்தன ...ர்வது கருநாடகத்தில்தான். ...கத்தின் சந்தன எண்ணெய் ...ம் ஆலை உலகிலேயே மிகப் ...ு. உலகச்சந்தையை மைசூர் ...ய் தான் பெரிதும் ஆக்ரமித்துக் ...டிருக்கிறது. மைசூர் சந்தன

கேம் சேன்ச்சுவரிக்கு தான் கடந்த திங்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்கு வருகை தந்த எகிப்துநாட்டுத் தலைவர் நாசர் சென்று கண்டு களித்து மிகவும் பாராட்டினர்.

இது மட்டுமில்லாமல் குடகிலும் ஒரு கேம் சேன்ச்சுவரி இருக்கின்றது.

இப்படி காட்டு வள...கிலும் காட்டு விலங்குகள் கிடைப்பதில் அபரிதமும் கொண்டு வளமுள்ள நாடாகத் திகழ்கிறது கருநாடகம்.

கன ரகத் தொழில்கள் மட்டுமின்றி சிறு தொழில்களும், குடிசைக் கைத்தொழில்களும் ஒரு நாட்டிற்குத் தேவையான தொழில் வளமாக இருக்கின்றன, ஓரளவிற்கு.

கன ரகத் தொழில்கள் அமைக்க வடநாட்டு அரசாங்கம் முன் வராததாலும், வேறு வழி இல்லாததாலும் குடிசைத் தொழில் நிறைந்த அளவில் வளர்ந்திருக்கிறது கருநாடகத்தில். இவற்றில் மிகப் பெரிய அளவில் வளர்ந்திருப்பது கைத்தறித்தொழிலேயாகும். ஏறக்குறைய 5,000 கைத்தறிகளும், 1042 விசைத் தறிகளும் மைசூர் மாநிலத்தில் இயங்குகின்றன. இந்தக் கைத்தறிகள் பெரும்பாலும் பட்டு நூல்களினின்று தயாராகும் துணிகளையே நெய்கின்றன.

பளிங்குச் சிலையெனப் பரவசமூட்டும் பாவையரின் மேனியில் பளிச்செனெ அழகை எடுத்துக் காட்டும் பட்டுச் சேலைகளும், அழகுக்காக விரிக்கப்படும் கம்பளங்கள், சமக்காளம் போன்றவையும், பட்டுத்

நல்லதொரு பங்கு கருநாடகத்தைச் சேரும்.

கோடையிலே அமுதமென இளநீரும் உணவுப்பொருள்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாத பொருளுமாக விளங்கும் தேங்காய் தரும் தென்னைமரங்களும் மேற்குக் கடற்கரை பகுதியில் நிறைய இருக்கின்றன. தேங்காயினின்று எடுக்கப்படும் தேங்காய் எண்ணெயும், அதன் மரமும், பட்டையும் ஆலையும் நல்ல பயன் தருகின்றன. மேலும் தேங்காய் எண்ணெய் நிறைய அளவில் எடுக்கப்படுகின்றன.

கட்டிடங்கள் கட்ட மிக இன்றியமையாத பொருளாக விளங்கும் சிமெண்டு தயாரிக்கும் தொழிற்சாலைகள் மைசூரில் உள்ளன. ஏறக்குறைய 6.12 இலட்சம் டன் சிமெண்டுவரை உற்பத்தி செய்யப்படுகிறது ஓராண்டிற்கு. இந்த உற்பத்தி கருநாடகத்தில் உள்ள மூன்று சிமெண்டு கம்பெனிகளால் உற்பத்தி செய்யப்படுவது. இவற்ருல் ஏறக்குறைய ரூ 6.05 கோடி கிடைக்கின்றன. அசோசியேடட் சிமெண்டு கம்பெனி, பாகல்கோட் சிமெண்டுக் கம்பெனி, மைசூர் இரும்பு எஃகு உற்பத்திசாலை (பத்ராவதி) ஆகியவை உற்பத்தி செய்கின்றன சிமெண்டை.

அரசாங்க சோப்புத் தொழிற்சாலை ஒரு ஆண்டிற்கு 2.28 பவுண்டு சந்தன எண்ணெய் தயாரிக்கின்றது. இதனல் ஏறக்குறைய ரூ 1.03 கோடி வருவாய் கிடைக்கிறது.

காகிதம் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நல்ல வகை மரங்களும்

இந்த நிலையில் 'நம்மவரே' 'தெற்கு தேயவில்லை, வளர்கிறது' என்று 'விபீடண' குணம் கொண்டு துரோகப் புத்தியுடன் 'ஐந்தாம்படை' வேலை செய்கின்றனர்.

"துள்ளியெழும் மக்கள் முன் தூள், தூள் இந்தத் துரோகிகள்! வளர்ந்து வரும் இன உணர்வு முன் வளைந்து போகும் இவர் தம் வஞ்சகச் செயல்! எங்களை அடிமையாக்க யாருக்கும் உரிமையில்லை! எவருக்கும் தைரியமில்லை!'' என்று சுதந்திரப் பண்பாடி, சர்வாதிகாரத்தைச் சுக்கு நூருக்கி எதேச்சாதிகாரத்தை பொடிப் பொடியாக்கிப் பார்த்திடத் திராவிடத்து மக்கள் புறப்படும் நாள் அதிகத் தொலைவிலில்லை.

இன்று இல்லையேல் நாளை, இல்லையேல் அதற்கு மறுநாள் அல்லது என்றே ஒரு நாள் வடவராட்சி விட்டுக் கொடுக்கத்தான் போகிறது! 'திராவிட நாடு' கட்டாயம் அமையத்தான் போகிறது. இதற்கு அச்சாரமாகத்தான் கரும்பென இனிக்கும் கருநாடகமும், அமுதென சுவைக்கும் ஆந்திரமும், தேனென இனிக்கும் தமிழகமும், கசுத்தூரியென மணக்கும் கேரளமும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மகத்தான ஆதரவு தருகின்றன. அவையே நம்மை ஆட்சி பீடத்தில் ஏற்றும் நாள் வராமலா போகிறது?

—இரா. மதனகோபால்
பி. காம்., டி. ஐ பி.

— [illegible] தொடர்ச்சி —

[illegible]ான அந்தக் காப்பு [illegible]டது. கிராமத்தின் தென் [illegible]ட்டில் வசித்து வந்தவன் [illegible] விற்கச் சென்றபொழுது [illegible]ண்டுபிடிக்கப்பட்டான்! கிராமத்து [illegible]யக்காரருக்கு அவனைக் கண்ட [illegible]ாபத்திற்குப் பதில் திகைப்பே [illegible]தாம்.

[illegible] அரசாட்சி செய்யும் அவனை — [illegible]ரும் நல்லவன் என்றே [illegible]லி வந்தனர். அவனோ அந்தக் காப்பு. தன் காப்புதான் என்றும், மரணப்படுக்கையில் இருக்கும் தன் தாய்க்கு மருந்து வாங்கக் கையில் பணம் இல்லாததால் அதை விற்க எண்ணியதாகவும் சொல்லிச் சொல்லி அழுதான்—துடித்தான். கதறினான். பயன்?...

எந்தக் காப்பு காணாமற் போய்விட்டதோ, அதே காப்பு அவனிடம் இருக்கும்போது, மணியக்காரரும் மற்றுமுள்ளோரும் என்னதான் நினைக்கமுடியும்...?

"நான் பவனி வரும்போது எப்படியோ தவறிக் கீழே விழ, அது அவன் கையில் கிடைத்திருக்கும்" என எண்ணி அவர்கள் அவனை மன்னித்து அனுப்பிவிட்டனர்.

பிறந்தது முதல் துன்பத்தையே இன்பத்தையே இன்னதென்று கண்டறியாத அவன், மரணப்படுக்கையில் கிடக்கும் தன் மாதாவுக்கு மருந்து வாங்கப் பணம் இல்லாமல் தன் சொந்த நகையை விற்கச் சென்றபொழுது திருட்டுப் பட்டம் கட்டி அனுப்பும் இந்த உலகத்தை நினைத்து நினைத்து நெஞ்சம் கொதித்து வீடு திரும்பினான்.

இவையெல்லாவற்றையும் நான் அறிந்தேன். அந்தக் காப்பு என் கைக்குக் கிடைத்த பின் ஏற்பட வேண்டிய மகிழ்ச்சி ஏனோ என் மனதில் மலரவில்லை!

அதே இரவில்!... திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு பெட்டியைத் திறந்து பட்டாடையை எடுத்து உதறினேன். கீழே "டணார்" என்ற ஒலியுடன் என் காப்பு விழுந்தது. உணர்ச்சியற்றவன்போல் கீழே விழுந்த காப்பையும் என் கையில் இருந்த காப்பையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். இரண்டும் ஒரேமாதிரியானவை! அப்படியானால் காலையில் கிடைத்த காப்பு ஏது?

காணாமற் போன என் காப்பு நான் மடத்தில் சேருவதற்குமுன்பு, என் தாய் தன் கைகளில் போட்டிருந்த இரண்டு காப்புகளில் ஒன்றை எனக்கு அன்புச் சின்னமாகக் கொடுத்திருந்தாள். என் தாயிடத்தில் மற்றொரு காப்பும் அதேபோல் இருந்தது. காலையில் கிடைத்த காப்பு என் தாயிடமிருந்த மற்றொரு காப்பு! எனவே திருடன் என முடிவு கட்டியவன் என் தம்பி திருநாவுதான்!

சிதறிக் கிடந்த எண்ணங்களை ஒன்று கூட்டிப் பார்த்தேன். அதற்கு சந்தர்ப்பங்கள் சாட்சி கூறின.

அமைதி குடிகொண்டிருந்த என் உள்ளத்தில் மீண்டும் குழப்பம்! சொல்லமுடியாத துயர அலைகள் என்னைத் தாக்கின. என்னால் என் தாய்க்கும் தம்பிக்கும் ஏற்பட்ட துயரத்தை நினைக்க நினைக்க என் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது.

திடீரென்று அறையைவிட்டு வெளியேறினேன். மழையும் காற்றும் மாறி மாறி வீசின. வெறி பிடித்தவன்போல் அவற்றை இலட்சியம் செய்யாமல் தென்கோடி வீட்டை நோக்கி வேகமாக நடந்தேன்.

அந்தத் தென்கோடிக் குடிசையை அடைந்தபோது உள்ளே ஏதோ பேசும் குரல் கேட்டு, மேலெல்லாம் தண்ணீர் சொட்டச் சொட்ட ஒதுங்கி நின்று கவனித்தேன்.

உள்ளே அவள்—என் தாய்—சொன்னாள்.

"திருநாவு, நம்மூருக்கு வந்திருக்கும் சுவாமிகள் யாரென்று உனக்குத் தெரியுமா?"

"யாரம்மா அந்தச் [illegible]யார்?"

"உன் அண்ண[illegible] சிவம்தான் அந்தச் சாமியார் [illegible]"

"அண்ணன் [illegible]?"

"இப்போ[illegible] அவன் அண்ணன் சதாசிவம் [illegible]ம்! ஸ்ரீலஸ்ரீ சதாசிவத் தம்பிரான் அவர்கள்!... மைந்தா! என் பெற்ற வயிறு அவனைப் பார்க்கத் துடித்தது. காலையில் அவன் பவனி வரும்போதுதான் வாசலில் நின்று கவனித்தேன். அவன் இந்த நிலையை அடைந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. அவன் செய்யும் சேவை மகத்தானது. பற்று என்பது சிறிதும் இல்லாது இருப்பதனால்தான் அவன் தன் இலட்சியத்தை அடையமுடிந்தது. இனி அவன் பற்றற்ற துறவி!...உலகத்தினர் யாவருக்கும் தந்தையாய், தம்பியாய், சகோதரனாய் இருக்க வேண்டியவன். இனி அவன் யார்? நாம் யார்? அவனை அந்த மடத்திற்குக் காணிக்கையாக்க நாங்கள் கடமைப்பட்டிருந்தோம். அதை நிறைவேற்றியும் விட்டோ[illegible] இப்போது இந்தக் காட்சியைக் [illegible]க் கொடுத்துவைக்காமல் உ[illegible]த தான் இல்லாமற் [illegible] இனி நம் சொந்தத்தை [illegible] அவன் இலட்சியத்தினி[illegible] நாம் காரணகர்த்தாக்[illegible] கக்கூடாது. அதனால் [illegible] யிலிருந்து தவறியவ[illegible] அது அழகல்ல! சுயநலம[illegible]ால் லாதது! ஆகவே நாம் அ[illegible]னத் தெரிந்ததாகவே காட்டிக்கொள்ளக் கூடாது!"

அதற்கு மேலும் அங்கு நிற்க என்னால் முடியவில்லை. வானத்தை நோக்கினேன். அது சற்று வெளிறிட்டு இருந்தது. என் உள்ளத்தைச் சூழ்ந்திருந்த இருளும் இப்போது விலகியிருந்தது. என்னையும் மீறிய சக்தி ஒன்று என்னை மடத்திற்கு தள்ளியது!

இரவு இறந்து பொழுதும் பிறந்தது!

மணியக்காரரை வரவழைத்து என் காப்பு கிடைத்துவிட்டதாகக் கூறி அந்தக் காப்பை திருநாவு என்பவரிடம் கொடுத்து மன்னிப்புக் கேட்டு வருமாறு சொல்லி அனுப்பினேன்.

மணியக்காரர் சென்று திரும்பினார். அவர் செல்லும்போது அந்தக் கிழவி—அதாவது என்னுடைய தாய்—மூச்சு விடக் கட்டப்பட்டுக்கொண்டிருந்தாளாம். அவள் அருகில் அவன்—என் தம்பி திருநாவு—சோகச் சுமைதாங்கியாக இருந்தானாம். மணியக்காரர் விவரத்தை சொன்னவுடன் கிழவியின் முகத்தில் ஒருதெளிவு—பொலிவு பிரகாசம் ஏற்பட்டதாம். வாயிற்படியைத் தாண்டும்போது "அம்மா!" என்ற அலறல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாராம்! அவன் கிழவியின் சடலத்தில் முகத்தைப் புதைத்து கதறினானாம்!

மணியக்காரர் இவற்றை எல்லாம் என்னிடம் சொன்னார். நான் செயலற்று நின்றேன். "இந்தக் காயம் பொய்யானது! நீர்மேல் குமிழ் போன்றது இல்வாழ்க்கை!" என்ற ஒலி எங்கிருந்தோ வந்தது.

— அவிநாசி ஆரெசு மணி.

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

ஆந்திரமும் அவ்வழியே! அதன் ஆத்திரமும் அடங்கவில்லை! ஓர் அமை[illegible]ரையே பதவிவிட்டு விலக்கும் அளவுக்கு, அங்கு போட்டியும் பூசலும் [illegible] திருக்கின்றன. மே மூன்றும் நாள் ஆந்திரப் பிரதேசத் தேர்தல் குழுவுக்[illegible] தேர்தல் நடந்தது. முதலமைச்சர் சஞ்சீவய்யா மேலிடக் கட்டளைப்படி ஒன்பது[illegible] பேரை அத்தேர்தலுக்கு நிறுத்தினார். அதில் அமைச்சர் சுப்பா ரெட்டியின் பெ[illegible] இல்லை. எனவே, சுப்பா ரெட்டி தனது ஆட்களை திரட்டிக்கொண்டு தே[illegible] களத்திற்கு வந்து மும்முரமாகப் போட்டியிட்டாராம்! சுப்பா ரெட்டி தோல்வி[illegible] அணைத்துக்கொண்டதோடு, ஆந்திர முதலமைச்சரால் மிரட்டப்படும் அளவுக்[illegible] ஆளாகிவிட்டார். முதலமைச்சர் சஞ்சீவய்யா சுப்பா ரெட்டியின் பொறுப்புக்களைத் தானே ஏற்றுக்கொண்டு, சுப்பா ரெட்டியைம் பதவியை விட்டு விலகும்படி கோரியிருக்கிறார். அல்லூரி சத்தியநாராயணராசுவுக்கும் சுப்பாரெட்டி மே[illegible] சினம்! தெலிங்கானா, இராயலசீமா, ஆந்திரம் என்ற இம்மூன்று பகுதிகளை[illegible] அடக்கியது விசாலாந்திரம் எனப்படும் இப்போதைய மாநிலம். இத்தேர்தல்[illegible] ஆந்திரப் பகுதியினர்க்கே அதிகமான இடந் தரப்பட்டது சஞ்சீவய்யாவ[illegible] அதையும் தனது தகராறுக்குச் சாதகமாக்கிக்கொண்டுள்ளார் தோழர் சு[illegible] ரெட்டி. ஆந்திரமும் ஆத்திரப்படுகிறது என்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும், இதை வைத்து?

சீடர்களே வெறியின் சிகரங்கள் என்றால் நேரு இருப்பது எந்த நிலையில்? சொல்லவும் வேண்டுமா?

காங்கிரசுப் பார்லிமெண்டரிக் கட்சிக்குக் கடந்த சின்னாட்களுக்கு முன்பு நடந்த தேர்தல்களில் நேருவின் கை ஒரேயடியாக நொறுக்கப்பட்டிருக்கிறது. காட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டவர்கள், கண் பார்வைக்கே அஞ்சி நடுங்கியவர்கள் என்றிருந்த காங்கிரசுக்காரர்கள், இப்போது நேருவுக்கு முன்[illegible] கையை உயர்த்தியிருக்கிறார்கள்! இப்போது நடந்த இத்தேர்தலால் பு[illegible] பதவிக்கு வந்த பதினெட்டுப் பேருள் நேருவின் ஆட்கள் இரண்டே இர[illegible] தான். இந்திரா காந்தியும் கிருட்ணமேனனும் நேருவின் "புக"ழை [illegible] ஒவ்வொரு உறுப்பினர் வீட்டுக்கும் சென்று நேருவின் ஆட்களுக்கே வா[illegible] கேட்டிருக்கின்றனர். [illegible] நேருவுக்குப் பிடிக்காத இராம[illegible] அவரின் ஆட்க[illegible]கின்றனர். உடனே, நேருவுக்குப்[illegible] ரெட்[illegible]ார், கு[illegible]யும் சட்ட விரோதமாகவும் [illegible] [illegible]ாக்கியிருக்கிறார்.

[illegible] கட்சிக் கூட்டத்தில் கண்டித்துக் [illegible] தியாகி. இவர் அன்று முதல் நேருவின் செயற்கை ஒளி[illegible] வருவதை நாம் அறிவோம். தியாகியின் வழியை தீயவ[illegible] சச்சா நேரு, "உம்மால் சும்மா இருக்க முடியாவிட்டால் கா[illegible]யேறும்!" என்ற முறையில் மிரட்டியிருக்கிறார். "நீர் வெ[illegible] வெளியேற்றுவோம்!" என்ற பொருள்பட நேரு மிரட்டி[illegible] கொதித்தெழுந்தார்.

"காங்கிரசென்ன, உம் அப்பன் வீட்டுச் சொ[illegible]தைப் போலவே நானும் காங்கிரசுக்குத் தொண்[illegible]டாற்ற[illegible] உமக்கு அப்படி விருப்பமிருந்தால், நீர் வெளியேறலாம்! [illegible] கொதித்துக் கூறியிருக்கிறார் தோழர் மகாவீர் தியாகி! சச்[illegible]வின் வீரிய் அப்போதுதான் அடைபட்டிருக்கிறது. சீட[illegible] வழியைப்போலவே, பண்டிதர் வழியும் இருண்டிருக்கிறது!

இத்தனையும் எதைக் காட்டுகின்றன? இதைத்தான்: பாரதியைத் து[illegible] கழைத்து, காந்தியைச் சான்றுக்கிழுத்து, அவர்கள் ஆடிய ஒற்றுமைக்[illegible] தெல்லாம், வெறும் பகற்கூத்தே! உரத்த குரலில் ஒற்றுமைப்பண் இசைக்[illegible] அவர்கள் பெற்றுப் போட்டவை தான், இந்த ஓராயிரங் குழப்பத் தேள்களு[illegible] அவை, அமைச்சர்களின் நேரத்தைப் பறித்துக்கொண்டு நாட்டு அரசியலை[illegible] குலைக்கின்றன. அத்தனைக்கும் அடிப்படை ஒன்றே! அதுவே பதவி வெறி[illegible] பதவி வெறி! பண்டிதராலும் அணைக்கமுடியாத பதவி வெறி!

தென் நாடு

(தி. மு. க. வார ஏடு)

ஆசிரியர்: என். ஜீவரத்தினம்.

ஜூன் முதல் வாரம் முதல் ஞாயிறுதோறும் வெளிவரும்.

தனிப்பிரதி 13 புதிய காசுகள். வருடச் சந்தா ரூ. [illegible]

விற்பனையாளர் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

நிர்வாகி,

தென் நாடு அலுவலகம்,

10, ஆவூர் முத்தியாலு மேஸ்திரி தெரு, புதுவண்ணை, சென்னை

நூல் நயம்

— செல்லையா —

கவியரங்கில் முடியரசன்

ஆசிரியர் : முடியரசன்

பாரதிதாசன் பரம்பரையில் வளர்ந்தெழுந்த கவிஞர் முடியரசர் 18 அரங்கங்களில் ஏறிப் பாடிய கவிதைகள் 18-ம் இதில் அடங்கியுள். காரைக்குடிக் கம்பன் திருநாளில் ஆடவர் குறித்துப் பாடிய கவிதை முதலாவது; தஞ்சை சரபோசிமன்னர் கல்லூரியில் பாடிய கவிதை இறுதியில் நிற்கிறது.

"உரிமை" என்ற தலைப்பில் எழுத்தாளர் உரிமைகளும் கடமைகளும் நினைவூட்டப்படுகின்றன. இவற்றை எல்லோரும் ஏற்று வாழ்தல் வேண்டும்.

முடியரசர் சொல்லாட்சிக்கு பெயர் பெற்றவர். அத்தோடு அவரது சொற்கள் இரு பொருள் தந்து சுவை ..ட்டுவதும் எண்ணு ..ற்குரியது. 3-ம் பக்கத்தில் வரும் "மேற்படி பா"ரும்; "தேருக்குப் பாடையுண்டு" என்ற வரியும் சிந்தனைக்குரியன.

படிப்பவர்களையே திடுக்குற வைக்கிறது, கவிஞன் பாரதி பற்றிப் பாடிய கவிதையின் தொடக்கம்.

'முருகா! முதல்வா!" என்று முடியரசரின் அப்பாடல் தொடங்குவதைக் கண்டதும், "எப்போதும் முளைத்து இந்த பக்தி?" என்று தோன்றும். குறிப்புக்களைப் பார்த்த பின்தான் முடியரசரால் விளிக்கப்பட்ட முருகன், தஞ்சை சரபோசிக் கல்லூரி முதல்வர் முருகையன் என்பது விளங்கியது. முடியரசர் கையில் தமிழ் விளையாடுகிறது!

வெண்தாடி வேந்தரை, தயரதன் உருவில் காட்ட முனைந்திருக்கிறார் போலும் ஆசிரியர். கம்பன் திருநாளி..., பெரியார் நினைவை ஊட்ட ..யன்றிருக்கிறார் என்றே கருது..றோம். முயற்சிக்குப் பாராட்டு!

முடியரசர் தமது ஆசிரியர் திரு. மீ. முத்துச்சாமிப் புலவர்க்குக் காணிக்கையாக்கியுள்ள இந்நூலை, டாக்டர் அ. சிதம்பரநாதனார் அலங்கரிக்கிறார், தாம் வழங்கிய மதிப்புரையாம் பொன்னுரையால்.

மொத்தத்தில், தமிழ் மரபு தவறாமல் புனையப்பெற்ற அருங்கவிதைகள் இவை; சுவையும் பயனும் உள.

விலை ரூ. 2-50.

★

பாவ மனனிப்பு

ஆசிரியர்: பி. சி. கணேசன்

"பாவ மன்னிப்பு" முதலிய பதினைந்து கதைகள் கொண்டது இச்சிறுகதைத் தொகுப்பு. இக்கதைகள் அனைத்தும் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் அஞ்சுவதுபோல் ..ர்ரும் ..மிட்டுவிடக்கூடிய புதிய ..லை, இவை.

..தும், பல்வகைச்சுவை .. கதைகள். இவற்..கங்கே கற்பனை அழகு .. தொடர்களும் அள்ளி ..சிரியர். ஆணின் கையும் .. கையும் இணைந்ததை,

"கைகல.." .. குறி.. காட்டும் ..ந்தது. இ.. போ.. ..சியக்.. செ.. கின்..

பன்மொ.. யார் அழகி.. ஒன்.. யும் வழங்.. அது நல்.. ஒரு சிறுகதை விமர்சனக் கட்டுரை.. யாக அமைந்துள்ளது.

மொத்தத்தில், இந்நூல் ஒரு நல்ல பொழுதுபோக்கு!

விலை ரூ 2-25.

இரண்டையும் வெளியிட்டோர் :

முத்து புத்தக நிலையம், திருச்சி-2.

★

தமிழ் வாழ இவர் வாழ்ந்..

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே அதன் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்து வந்த மணிமொழியார், நூற்றுக்கணக்கான தமிழ்த் திருமணங்களையும் சுயமரியாதைத் திருமணங்களையும் தலைமை தாங்கி நடத்தி வைத்திருக்கின்றார். மாணவப் பருவத்திலிருந்தே நீதிக் கட்சியின் வளர்ச்சிக்காக உழைத்து வந்த அவர், 1944-ல் அக்கட்சி திராவிடர் கழகமாக மறுமலர்ச்சி எய்தியபோது அக்கழகத்திலும் ஈடுபட்டு அதன் முதன்மைத் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

1949-ல் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டபோது, அதன் நிதிக் குழுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்றாண்டுகள் பணி புரிந்தார். 1951 டிசம்பரில் சென்னையில் ஈடு இணையற்ற சிறப்புடன் நடைபெற்ற தி. மு. க. முதல் மாநில மாநாட்டின் செயலாளராக இருந்துஅம்மாநாட்டின்வெற்றிக்காக இரண்டு மாதகாலம் ஓயாது உழைத்தார். தி. மு. க. முதல் சட்ட திட்டக் குழுவில் உறுப்பினராக இருந்து, சட்ட திட்டங்களைச் செம்மையான முறையில் வகுக்கத் துணைபுரிந்தார். 1952-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி. மு. க. ஆதரவு பெற்ற சுயேச்சை அபேட்சகர்களுக்காகவும், 1957-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி. மு. க. அபேட்சகர்களுக்காகவும், ஆதரவு திரட்டும் பணியில் பேருக்கம் காட்டி உழைத்தார். 1959-ல் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலின் போது, தி. மு. க. தேர்தல் குழுவின் உறுப்பினராக அமர்ந்து, தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றி பெறுவதற்காக அல்லும் பகலும் பணியாற்றினார்.

நான்கு முறை சிறை வாசம் :

இந்தி மொழிக் கொடுமையிலிருந்து செந்தமிழைக் காப்பதற்காக.. பொதுமக்களின் எழுத்துரிமைப் .. சுரிமைகளை நிலைநாட்டுவதற்காக.. மணிமொழியார் அவர்கள் நான்கு முறை சிறைவாசம் அனுபவித்திருக்கின்றார். **முதல் முறை :** அன்பர் ..ருசியார் கல்வியமைச்சராக ..தபோது மூண்டெழுந்த இந்தி ..ப் போரின் போது ..948 ல் சென்னை பெரியார் ..வில் திராவிடர் கழக நிர் ..தழுக் கூட்டம் நடைபெற் ..வமயம் அங்கு வந்திருந்த .. அனைவரும் கைது செய் ..டபோது மணிமொழியாரும் கைது செய்யப்பட்டு ஒருவார காலம் சிறையில் வைக்கப்பட்டார். **இரண்டாம் முறை :** 7-9-1948 அன்று சென்னை டி. டி. வி. 'உயர்நிலைப் பள்ளி முன்பு மறியல் செய்வதற்காக இந்தி எதிர்ப்புத் தொண்டர்களைத் தலைமை தாங்கி அழைத்துச் சென்றபோது மீண்டும் கைது செய்யப்பட்டு, ஒரு வாரச் சிறைத் தண்.. ..ரார். **மூன்றும் முறை :** .. அன்று டில்லி அ.. கிருட்ண மேதாப் சென்.. போது, தி. மு. க. தி.. அவருக்குக் கருப்புக்.. நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்.. டிருந்த மணிமொழியார் .. கைது செய்யப்பட்டு அன்று .. காவலில் வைக்கப்பட்டிருந்.. **நான்காம் முறை :** 1958 ஜனவ.. முதல் வாரத்தில் பண்டிதநே.. சென்னை வரும்போது அவருக்குக் கருப்புக்கொடி காட்டுவது என்று தி. மு. க. ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியைத் தடுக்க ஆட்சியாளர்கள் மேற்கொண்ட பல முயற்சிகளில் ஒன்றாக மணிமொழியார் அவர்களை 2-1-58 அன்று 'போர் வாள்' அலுவலகத்தில் வந்து கைது செய்தனர். இம்முறை இரண்டு வார காலம் சிறை வாசம் செய்தார், மணிமொழியார் அவர்கள்.

நடிப்பு உலகில்...

அறிஞர் அண்ணா அவர்களால் இயற்றப்பட்டுச் சென்னை மாவட்டத் தி. மு. க. மாநாடுகளில் நடிக்கப்பட்ட 'வழக்கு வாபஸ்' என்னும் ஓரங்க நாடகத்தில் மாணிக்கம் செட்டியார் என்னும் கதை உறுப்பினராகவும், 1952-ல் சென்னையில் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற 'வாழ்க்கைப் புயல்' என்னும் நாடகத்தில் டாக்டர் இராமமூர்த்தி என்னும் கதை உறுப்பினராகவும் மணிமொழியார் நடித்துள்ளார்.

அவர் தொண்டு ஒரு தொடர் கதை. அது இன்னும் வளரும். அவர் பெயர் இயக்க வரலாற்றில் என்றும் வாழும். ★

தேவகோட்டைத் திருக்குறள் விழா

தேவகோட்டைத் திருக்குறட் கழக முதல் ஆண்டு நிறைவு விழா 21, 22-5-'60-ம் நாள்களில் தேவகோட்டை ஆவி. க. காசிநாதர் அரங்கில் நடைபெறும்.

21-5-'60

காலை நிகழ்ச்சிகளில்

அ. ராம. அ. லெ. அ. முத்துவீரப்பர், ஆவி. க. சோமசுந்தரனார், அன்பு அருணசலனார், சா. இராமகிருட்டினர் எம்.எல்.ஏ., கண்ணதாசன், முடியரசன் முதலியோரும்,

மாலை நிகழ்ச்சிகளில்

டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் வ. சுப. மாணிக்கனார், க அன்பழகனார், எம். எல். ஏ., கண்ணதாசன் முதலியோரும் கலந்துகொள்வர்.

காலையில் கவியரங்கம் நடைபெறும்.

22-5-'60

காலை நிகழ்ச்சிகளில்

குன்றக்குடி அடிகளார், மெ. சுந்தரனார், தமிழண்ணலார், சுப. அண்ணாமலையார் முதலிய பலரும்,

மாலை நிகழ்ச்சிகளில்

குன்றக்குடி அடிகளார், கி. ஆ. பெ. விசுவநாதனார், கண. சிற்சபேசனார் முதலிய பலரும் உரையாற்றுவர்.

காலையில் பட்டிமன்றமும் இரவில் நாடகமும் உண்டு,

அனைவரும் வருக, குறளின்பம் பருக !

அன்புடன் அழைக்கும்

திருக்குறட் கழகத்தார், தேவகோட்டை.

...ண்பும் நாகரிகமும் - ...ம் பொருள்கள்

...ள எல்லா நாடுகளும் முன்னேறுகிற இந் ... கரிகம், முன்னேற்றம், ... பான்ற சொற்கள் மிகவாகப் ... கின்றன. பண்பாடு-நாகரி ... வ்விரண்டினையும், பெரும் ஒரே பொருளில் வழங்கு ... ர். ஆங்கிலத்தில் பண்பு Cul- ... ரும், நாகரிகம் Civilization ... வழக்காற்றில் உழலுகின் ... ண்டிற்கும் நுண்ணிய வேறு ... உண்டு.

...ளுவர் காலத்தில் காதல், காமம் ... ண்டும் ஒரே பொருளில் வழங்கி ... துபோல, பண்பு நாகரிகம் இவ்விரண்டும், உளப்பண்பு என்ற பொருளிலேயே வழங்கினர் போலும்.

"பெயக்கண்டு நஞ்சுண்ட
மைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

இதில் 'நாகரிகம்' மிக முதிர்ந்த அருள் உள்ளத்தைக் குறிக்கிறது.

"பண்புடையார்ப் பட்டுண்
டுலகம், அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

இக்குறளில் பண்பு என்ற ... இன்று உழலும் பொருளில் ... ளது.

ஆனுல் ஈராயிரம் ஆண்டி... பிற்பட்ட இந்நாளில் எத்தனை... சொற்கள் புதியனவாகப் பிறந்து, புகுந்து வளர்ந்து நிலைத்து வழக்கில் உழல்கின்றன. சில சொற்கள் வேறு பொருளிலும் வழங்கப்படுகின்றன, முன்னாளில் மக்கள் கையில் உழலும் பணத்தைக் காசு என்றும் பொன் எனவும் குறித்தனர். தற்போது பொன் என்பது ஆபரணம் செய்யும் உலோகத்தையே குறிக்கிறது. ஔவை என்பது அ... கும் வழங்கிய சொல. கபிலை-என்பது பசு அன்று ஆனுல் இன்றே கபிலை என்ருல் நீர் இறைக்கும ஒரு சாதனம். பயிர் என்ற சொல் ஒலி என்ற பொருளில் வழங்கியது. தடி, மின்னலைக் குறித்தது.

சில சொற்கள் வழக்காறு அற்றுப் போயின. இந்தனம = விறகு, அறல்-கருமணல், ஏனல் = தினை ஐவனம் = மலை நெல் முதலிய சில.

இவ்வாறு நோக்கின் பண்பாடும் நாகரிகமும் வேறு வேறு பொருட்களில் வழங்குபவையேயாம். வழங்கப்படவேண்டியனவேயாம்.

பண்பு என்பது—உள்ளம், அறிவு அல்லது மூளை இவற்றைப் பற்றியது. நாகரிகம் என்பது இவ் வறிவு, உள்ளம் இவற்றின் துணைகொண்டு மாந்தன் உலகில் படைக்கும் ஆக்கப் பொருள்களின் வகைகளைக் குறிப்பது. வந்த அனைவரையும் சுற்றமாகக் கருதியது தமிழர் பண்பாடு. "மணியும பொன்னும் மயில்தழைப் பீலியும், பிற அணியும் தரளமும்" கறியும் கப்பலில் கொண்டு கொட்டி மேனுட்டவர்க்கு நாகரிகம் கற்றுத் தந்தது தமிழர் நாகரிகத்தின் ஒரு கூறு. அது போன்றே பழம் பெரும் பெருமைக்கு இலக்காய் வாழ்ந்த எகிப்து போன்ற நாடுகளிலும், அவரின் இலக்கியம் இசை போன்றனவற்றைப் பண்பாடு என்கிருேம். அவர்தம் வண்ணமிகு கட்டிடங்கள், சித்திர, சிற்ப வேலைபாடுகளால் ஆகிய பொருட்களை அவரின் நாகரிகம் என்கிருேம். இன்று கூட அமெரிக்க நாகரிகம என நாம் கூறுவது, அவர்தம் திறனுல் ஆக்கப்பட்ட செய்பொருட்களைத தாம், அவர்தம் பண்பாடு என்பது முழுக்க முழுக்க நம்மினும் வேறுபட்டது.

பண்பு என்பது உளத்தாலும் அறிவாலும் உணர்ந்து நுகரக்கூடியது. பிறர்க்கு உரைத்தாலன்றி ஏற்க இயலாதது. ஆனுல் நாகரிகம் பொருள் வடிவில்-உருவம் பெற்று இருப்பதால், உலகின் எங்கோ ஒரு மூலையில் ஆக்கப்பட்டாலும், இங்கு அதை அனுபவிக்க இயலும். இயங்கியும் (Motor) வானுர் இயங்கியும் (Aero-Plane) நம் நாட்டில் செய்யப்படவில்லையானலும், நாம் அவற்றை உபயோகப்படுத்துகிருேம்.

ஒவ்வொரு நாட்டு மக்களும் அவரவர் பண்பாட்டை விட்டு, பிற நாட்டுப் பண்பைத் தழுவ எளிதில் விரும்ப மாட்டார்... ஆனுல் பிற நாகரிகத்தை எளிதில் ஏற்பர். மேல் நாட்டவர் செய்த பொருட்களை அள வில்லாது வாங்கிக் ... யாளும் தமிழர் ... மேனுட்டுப்பண் பினையும் ... வழக்க... னையும் பின்பற்ற ஒருப்படுகின்ற... ? தமிழ் நாட்டில் உள்ள தமிழர் ... இயங் கியில் (Pleasure Car) ... வானெலியில் இசை கேட்டு மகிழவும் தயங்குவதில்லை. ஆனுல் எத்தனை பெண்கள் தலை மயிரைக் கழுத்தளவு வெட்டிக்கொள்ளவும் (Bobbed Hair) கால் சட்டை (Pant) அணியவும் துணிகின்றனர் ? செந்தமிழ் நாட்டுச் சிறப்பின் சிகரமாகச் சென்னை மாநகரிலுள்ள மகளிர் கல்லூரியில், கல்லூரி முதல்வரோ, ஆங்கிலப் பேராசிரியையாகப் பணி புரிபவரோகூடக் கால் சட்டை (Pant) அணிந்து தலைமுடியைக் குறைத்துக்கொள்ளக் காணேம் ஆனுல், இவை ... அளவு ஆங்கிலம் படித்... செய்துகொள்ளாதன ... இருந்தும் எம் ஏ. ... கல்லூரியில் ஆங்கிலம் ... கும் ஒரு தமிழ்ப் ... இரண்டு முழம ... ரெண்டு முழம சே... காலணா அளவு பொ... பாடில்லை வேறு சி... பெண்கள் கோயி... மாலும் முழுமுறை... அடித்துக்கொள்வார்... கணவனுடைய ஆசை... தடவைகூட தலை முடியைக் கழுத்தளவு குறைத்துக்கொள்ள இணங்க மாட்டார்கள். ஏன் கூறுகிறேன் என்ருல் பழக்கமும் பண்பாடும் பிய்த்து எடுத்தாலும் பிரியாதன என்பதற்கு!

பண்பு உள்ளத்தைப் பொறுத்தது என்று முன்னரே கூறினேன். அவ்வுள்ளம் பலருக்கும் வேறுபடுதலால் பண்பும் ஒரே படித்தாகப் பலரிடம் காணமுடியாதது. சிறந்த பண்புள்ளம் பலருக்கும் வராது. ஒரே படித்தான பண்புள்ளம் கொண்டவர் இருவர்தான் ஒருவரை ஒருவர் மதித்துக் கருத்தைப் பரிமாறிக்கொள்ள முடியும். பெரிய அரசு இருந்தும் தேவைக்கு அதிகமாகச் செல்வங்கள் இருந்தும் அவ்வளவையும் வெறுத்து, காட்டில் போதி மரத்தடியில், மக்கள் உய்ந்து மகிழ, 12 ஆண்டுகள், பனி, மழை வெய்யிலில் வாடிய புத்தர் பெருமானின் அருள் உள்ளம் எத்தனை பேருக்கு வரும் ?

'எடுத்த படை யாவினும்' தடுத்திட இயலாத வெற்றி கண்டு, தொடுத்த போர் எதிலும் தோல்வி காணுத அசோகன்,-பிற யாரும் அறிவுறுத்தாத காலத்தும்-போரில் வெறுப்புக் கொண்டு மக்கள் பணி புரியத் திருப்பியது போன்ற பண்பட்ட மனம் படைத்தவர் அவனுக்குப் பின் எத்தனை பேர ? ஆனுல் புத்தர் அசோகன் காலத்தில் உபயோகப் படுத்திய குதிரை வாள் வேல் முதலானவை இன்றும்தான் நம்மை விட்டுப் போகவில்லை.

பண்பின் ஆணைக்கு அடங்குவதே நாகரிகமாம். நாகரிகம் ஆக்கப்படு பொருள் ஆதலாலும், பண்பு அவற்றினை ஆக்கும் முழுமுதற் கர்த்தா ஆதலாலும், பண்புதான் அரசு ஓச்சும். ஆகவேதான் பண்பு வளரும் தன்மை உடையது. நாகரிகம் பண்பால் வளர்க்கப்பட்டாலன்றி தானுக வளராதது. துவக்கத்தில் எடுத்துக் காட்டிய குறளிலும் உலகு இயங்குவதும் வளர்வதும் பண்புடையோர் உளவாதலாலும், அவர் கையில் வளர் பொருட்கள் படுவதாலும்தான். இல்லையேல் உலகம் மண்ணேடு மண்ணுக மறைந்து விடும் என்று கூறுகிருர்.

"பண்புடையர் பட்டுண்
டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மண்"

செய்த பொருள்கள் கையாளப் படும்போது குறைந்தும் தேய்ந்தும் அழியுமே அன்றித் தானுக வளராதன. அாகிய சிலவற்றில் மட்டும், கையாள்பவன் அப்பொருளைக் குறித்துச் சிந்திக்க, தன் அறிவிற்கு வேலை தந்து அதனை மேலும் ஒரு படி முன்னேற்றுவது எப்படி என்று ஆராய்ந்து ஏதாவது கண்டு பிடித்தாலன்றி அதில் முன்னேற்றம் காண முடியாது. பண்பு அப்படியல்ல. வளரக்கூடியது. எத்தனையோ விஞ்ஞானிகள் தாங்கள் கண்டுபிடித்ததைவிட பிற்பட்ட விஞ்ஞானிகள் அவற்றை மிகவாகப் பெருக்கிவிட்டனர். இலக்கியத்தில் கூட சில காவியங்கள் முதல் காவியத்தை விடச் சிறந்தனவாக உள்ளன. செகப்பிரியர் (Shakes-peare) ... டகங்கட்கும் மூலக்க... டு. ஆனுல் ... இல்லாத ... வும் இவ ... ண்ணைப் ... புரிகின்றன. ... பொலிவுடைய ... தில் மிகு உருவம் இளைஞருக்கு இன்ப விருந்து. அதனை, கலை மனங்கொண்ட கானை, தன் உளத்து இருத்தி மனக்கண்ணில் காண்பான் அதனையே அவன் திரையிலோ-தாளிலோ வடித்து வண்ணம் தந்துவிட்டால் அதை ஓவியம் என்கிருேம். இங்கு, உள்ளத்தில் எழுந்த எண்ணமும் செய்யும் திறனும் பண்பு எனப்பெறும். அந்தப் பண்பினை வெளிக்காட்ட பயன்பட்ட செய்பொருள் ஓவியத்தை நாகரிகம் என்கிருேம வரைந்தபோது இருந்த எழில்தான் ஓவியத்திற்கு உண்டு. பிறகு தானுக மேலும் அழகு பெற்று ஒளிராது. ஆனுல் பண்பு அப்படியல்ல சின்னுட்குப் பின்னர், முதல் ஓவியத்தினும் சிறந்த ஒன்றைத் தீட்ட உள்ளம் வழி காணும்.

பண்பு-எதனையும் தனது நிலைமைக்கேற்ப மாற்றிக்கொள்ளும். ஆனுல் நாகரிகம் மாற்றமின்றி கடன் வாங்கப்படுகிறது. வெள்ளையர் பண்பை நாம் எவ்வளவோ மாற்றித் தான் பின்பற்றுகிருேம். மணமுறிவும் (Divorce), மறுமணமும் அவர்களுக்குச் சர்வ சாதாரணம். காதல் தம்பதிகள் அடுத்த ஆண்டில் மணமுறிவு கோரி, அதனைப் பெற்று, பிறகு இருவரும் இரு வேறு காதலர்களை நாடி, மறுமணம் புரிவதும் பின்னர் பழையபடி விடுவதும், பிறகு இப்படியே ஐந்து, ஆறு முறை பல பேருடன வாழ்ந்து, ஏழாம் முறை முதல் மணந்த இருவருமே மீண்டும் திருமணம் புரிந்து கொள்வதும் அங்கு விந்தை அல்ல. ஆனுல் இங்கோ, தன் மனைவி, நண்பனுடன் தனியே உலாவச் சென்ருள் எனறதுமே, தான், மனைவி, நண்பன் இம்மூவருடைய வாழ்வுகளையே, பாழாக்கச் சுட்டுத் தள்ளும் அளவிற்கு ஆத்திரம் பொங்கி எழுவது இந்நாட்டு உள்ளம்.

பண்பும் நாகரிகமும் சிறுபான்மை, வேறு வேறு என்ருலும், ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை.

பண்பும் அதன் பலனுய் காவியம் போன்ற பிறவும் வளர மனிதனுக்கு நிறைந்த ஓய்வு தேவை. பண்பு ஓய்விலும் உள்ளக் களிப்பிலும் மலர்வது. இதற்காகச் செய்யும் வேலையினுல் உடலுக்குக் களைப்பும் உள்ளத்தில் எரிச்சலும், பிற உறுப்புகளுக்கு ஊறும் உண்டாவதில்லை. நாகரிகமும் உழைப்பில் உருவாவதுதான் ஆனுல் அவ்வுழைப்பால் களைப்பும் மனச் சோர்வும் உண்டாகும் பண்பு அறிவின் ஒளி. நாகரிகம், பண்பு ஈன்ற வண்ணக் குழவி.

அறிஞர் பெருமக்கள் நு... தின் ஆய்ந்து மேலும் இத்தகை... எழுதினுல் படித்து மகிழ்வேன்.

-ஏலம்பாக்கம்

மா. பொ. இராமச்சந்திரன்.

> **நண்பர்கட்கு...**
>
> "முல்லை"யின் மேத் திங்களிதழைப் பல சூழ்நிலைகளால் வெளியிட இயலவில்லை. அடுத்த இதழ் ஜூன் முதல் நாளன்று கிடைக்கும்.
>
> —பொறுப்பாளர்.

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

நூற்ருண்டுகட்கு முன் இந்நூலின் நுண்மாண் நுழை புலத்தை யாவரும் தெள்ளிதின் அறிய வேண்டி பல அறிஞர் பெருமக்களால் எளிய இனிய தமிழ் நடையில் உரையாக்கப்பட்டது. இதற்கு உரை எழுதியோர் இளம்பூரணர், சேனுவரையன், நச்சினர்க்கினியர் பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்ற அறுவராவர். எழுத்திற்கு நச்சினர்க்கினியரும் சொல்லிற்குச் சேனுவரையமும் பொருட்கு இளம்பூரணமும் சிறந்ததாக விளங்குகிறது.

தொல்காப்பியத்தைப் பற்றிப் பல ஆய்வுரை நூல்கள் தோன்றி... மாதவச்சிவஞான சுவாமிகள் ...ரால் "தொல்காப்பியப் பாயிர விருத்தி" என்னும் நூலும் 'தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி' என்ற நூலும் எழுதப்பட்டுள்ளன தற்காலத்தில காலஞ்சென்ற ப. வே. மாணிக்க நாயக்கர், வேங்கடராசுலு ரெட்டியார் ஆகியோராலும், திரு. பாவாணர் அவர்களாலும் தெளிவான ஆய்வுரை நூல்கள் தோன்றியுள்ளன. திரு. பூவராகம்பிள்... அவர்கள் எழுதிய விளக்கவுரை ... சித்தாந்தக் கழகத்தாரால் வெளியி... பட்டுள்ளது.

இத்துணைச் சிறப்புக்களான் இயன்... இத் தொல்காப்பியத் தொட்டனைத்... ஊறும் மணற்கேணி போல என்றெ... றும் பயில்வார்க்கு இன்பம் பயப்பதா... விளங்குகிறது. இடைச் சங்கத்தில் ஏற்பட்ட கடற்கோள்களில் எத்துணையோ நூல்கள் அழிந்து போயினவேனும் இது நிலைப... இருப்ப... தமிழ் மக்களின் ந... ஆகவே இதனை நன்... நாவலந்தீவில் உறை... மாந்தர் அனைவரும் ... வார்களாக.

—புலவர் சி. அ...

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்...
தொலைபேசி எண் 83510.